Registered as a Newspaper பக்கங்கள் 10 விலை: ரூபா 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 புரட்டாதி 08 (24-09-1993) வெள்ளிக்கிழமை ஓசை 218

## யாழ். வைத்திய சாலையில் 'எயிட்ஸ்' பரிசோதனைக் கூடம்

யாழ். போதனா மருத்துவ மனையில் 'எயிட்ஸ்' நோய் பரிசோதனைக் கூடம் ஒன்று மிகவிரைவில் அமைக்கப்படவுள்ளது. மேற்படி மருத்துவ மனையின் ஆய்வுகூடத்தில் 'எயிட்ஸ்' நோயை இனம்காண்பதற்கு மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான வசதிகளே இதுவரை இருந்து வந்தன. அத்துடன் போதிய பயிற்சி பெற்ற ஆய்வுகூட உத்தியோகத்தர்களும் கடமையில் இருக்கவில்லை. இக்குறைபாட்டை நிவர்த்தி செய்யும் முயற்சியாகவே மேற்படி பரிசோதனைக் கூடம் அமைக்கப்படவுள்ளது. இதன் முதற் கட்டமாக மேற்படி (10ஆம் பக்கம் பார்க்க)

# ராணுவ நடவடிக்கை மூலம் பிரச்சினை தீர்க்க முடியாது

## சிறிமாவோ தெரிவிப்பு

(கொழும்பு)

"விடுதலைப்புலிகள் விரும்புவதைப்போல ஓர் அங்குல நிலத்தைக் கூட கொடுப்பதற்கு நான் தயாராகவில்லை. எனினும் ராணுவ நடவடிக்கை மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு ஒன்றை ஏற்படுத்த முடியாது. எனவே எனக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டால் இப்பிரச்சினையை அவதானமாகத் தீர்த்து வைப்பேன்" இவ்வாறு சிறிலங்காவின் எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

கம்பஹாவில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் உரையாற்றுகையில் வடக்கு, கிழக்குப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காணாவிட்டால் சிங்கள இனம் மிகவிரைவில் சிறுபான்மையாகிவிடும். யுத்தத்தினால் மட்டும் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது. எனவே அரசியல் தீர்வு ஒன்று அவசியமானது என்பதை அரசாங்கம் உணர்ந்துகொள்ள வேண்டும். எப்படியாயினும் இன்றைய அரசு யுத்தத்தை நிறுத்துவதற்கான சந்தர்ப்பம் எதுவுமில்லை, எனவே வடக்கு-கிழக்கு பிரச்சினை தொடர்பாக அரசாங்கத்தால் எதுவித முடிவும் எடுக்க முடியாது. சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளின் மரணத்தைத் தொடர்ந்து அரசாங்கம் பெரும் திண்டாட்ட நிலையில் உள்ளது என்றார்.

## கண்டி மாவட்டத்திலும் தேடுதல்வேட்டை தொடங்கும்

கண்டி மாவட்டத்திலுள்ள தனியார் வீடுகளில் உள்ளவர்கள் தொடர்பாக விபரங்கள் திரட்டப்படுவதாகவும் இதே வேளை குடியிருப்புக்கள் சோதனையிடப்பட இருப்பதாக கண்டி மாவட்டசிரேஷ்ட (10 ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினை தீர்வுக்கு பேச்சுவார்த்தை அவசியம்

அமைச்சர் ஹமீத் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு பகுதிகளில் நிலவும் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு அல்லாமல் பேச்சுவார்த்தை மூலமாகவே தீர்வு காணப்படல் வேண்டும் என சிறிலங்கா வெளியுறவு அமைச்சர் ஏ சி. எஸ் ஹமீத் தெரிவித்துள்ளார். தென்னிலங்கையில் தபாலகம் ஒன்றை திறந்து வைத்த பின் கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு பிரச்சினையை ஆயுத முனையில் அரசு அணுகுவது பலனளிக்காது, இனப்பிரச்சினை பூதாகாரமாக உருவெடுத்துள்ளதால் வளர்முக நாடுகள் பட்டியலில்உள்ள இலங்கைக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும் ஹமீத் மேலும் தெரிவித்தார்.

## திலீபனின் உருவப்படம்

தியாகி லெப். கேணல் திலீபனின் உருவப்படம் வடமாகாண பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் கொத்தணிகள் சமாசம் சார்பில்நாளை ஈழநாதத்துடன் இணைக்கப்படும்

## இந்திய மீனவர் ஒருவர் கடற்படையின் சூட்டுக்கு பலி

இந்திய மீனவர்கள் மீது சிறிலங்கா கடற்படையினர் மீண்டும் நடத்திய தாக்குதலில் ஒரு இந்திய மீனவர் பலியானார். கடந்த செவ்வாயன்று இராமேஸ்வரம் தனுஷ்கோடி பகுதிகளிலிருந்து மீன்பிடிக்கசென்ற மீனவர்களே இவ்வாறு சிறிலங்கா கடற்படையின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்கானதாக தெரிவிக்கப்படுகிறது.

இம்மாத ஆரம்பத்திலும் இவ்வாறு இந்திய மீனவர் ஒருவர் சிறிலங்கா கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு பலியானதும் நான்கு மீனவர் காயமடைந்ததும் தெரிந்ததே. இதனிடையே இலங்கை கடற்பகுதிக்குள் மீன் பிடிக்க தவறுதலாக சென்றுவிடும் தமிழக மீனவர் மீது சிறிலங்கா கடற்படை மேற்கொள்ளும் துப்பாக்கிப்பிரயோகத்தைதடுத்து நிறுத்தும்படி சிறிலங்கா அரசைக் கோருமாறு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா பிரதமர் நரசிம்மராவைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

## 40 பெண்கள் கொழும்பில் தொடர்ந்து தடுத்துவைப்பு

(கொழும்பு)

கொழும்பு நகரப்பகுதியில் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் தமிழ் இளைஞர்கள், யுவதிகள் கைது செய்யப்படும் படலத்தில் இதுவரை சுமார் 40 இளம் யுவதிகளும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக கொழும்பில் இருந்து புதன் மாலை எமக்கு கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

கைது செய்யப்பட்ட மேற்படி இளம்யுவதிகள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். கொட்டாஞ்சேனை பஸ் நிலையத்திலும், வெள்ளவத்தைப் பகுதிகளில் இருந்தும் இக் கைதுகள் அதிகமாக இடம்பெற்றதாக கூறப்படுகிறது. தனியார் ஸ்தாபனங்களில் தொழில்புரிபவர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோர் கைது செய்யப்பட்டிருக்கும் யுவதிகளில் அடங்கியிருப்பதாகவும் தெரியவருகிறது. (க), (நி)

## 13 கொலரா நோயாளர் ஆஸ்பத்திரியில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

கொலரா நோய்க்கு இலக்கானவர்கள் என சந்தேகிக்கப்படும் 13 நோயாளிகள் நேற்று யாழ். போதனா மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

நேற்று யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட 13 நோயாளிகளில் 6 பேர் கைதடி ரயர் தொழிற்சாலை அகதிமுகாமில் இருந்து வந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது இம் முகாமிலிருந்தே இந்நோய்க்காக சிகிச்சைக்கு வரும் நோயாளிகள் அதிகமாக இருப்பதாக தெரியவருகின்றது.

இதேவேளை யாழ், நகரப் பகுதியிலிருந்தும் நாவாந்துறை சங்கானை, உரும்பராய், போன்ற இடங்களிலிருந்தும் ஒரு சில நோயாளிகள் வந்துள்ளார்கள். (சி)

# தியாகி திலீபன் நினைவாக தொடர் உண்ணாவிரதம் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழத் தாயக விடுதலைக்காக தன்னுயிரைத் தியாகம் செய்து தமிழீழ மக்களின் நெஞ்சங்களில் நிறைந்துவிட்ட லெப். கேணல் திலீபனின் ஆறாம் ஆண்டு நிறைவு நினைவு நாட்களினையொட்டி தினசரி நடைபெற்று வரும் அஞ்சலி நிகழ்வுகளில் மக்களின் பங்களிப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வருவதை அவதானிக்க முடிகிறது.

யாழ். குடாநாட்டில் மட்டுமல்லாது வடதமிழீழத்தின் அனைத்துப் பகுதிகளிலும் தியாகி திலீபனுக்கு மிகவும் உணர்வு பூர்வமாகவும் எழுச்சி உணர்வுடனும் அஞ்சலி செலுத்தப்பட்டு வருகிறது. இவ் அஞ்சலி நிகழ்வுகளில் தினசரி பல்லாயிரக் கணக்கான மக்கள் பங்கெடுத்து வருகின்றனர்.

நினைவஞ்சலி நாட்களின் இறுதிக் கட்ட நிகழ்வுகள் மிகவும் உணர்வு பூர்வமாகவும் விறுவிறுப்பாகவும் நடைபெற்று வருகிறது. இந்த நிகழ்வுகளின் முக்கிய அம்சங்களாக தொடர் உண்ணாவிரதங்கள், சிரமதானங்கள், அடையாள உண்ணாவிரதங்கள் ஆகியவை விளங்குகின்றன.

வடமராட்சிக் கோட்டத்தில் உடுப்பிட்டி வட்டப் பிரதான பந்தலில் மூவர் தொடர் உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளனர்.

அதனைத் தொடர்ந்து இன்று மேலும் இரண்டு பேர் தொடர் உண்ணாவிரதத்தை [10ஆம் பக்கம் பார்க்க]

## தியாகி திலீபன் நினைவு உண்ணாவிரதம் சிரமதானம்

தியாகி லெப்டினன்ட் கேணல் திலீபனின் ஆறாவது ஆண்டு நினைவு நிகழ்வுகளின் முக்கிய அம்சமாக விளங்கும் அடையாள உண்ணாவிரத நிகழ்வுகள் நாளை பின்வரும் இடங்களில் இடம் பெறவுள்ளன.

சங்கானை வட்டம், சங்கானை அரசடி வைரவர் கோயில் முன்றல், வட்டுக்கோட்டை சிற்றூர் மக்கள்; கோப்பாய் வட்டம், நீர்வேலி வாய்க்காற்தரவை பிள்ளையார் கோவில் முன்றல், கோப்பாய் வர்த்தகர் சங்கம்; சண்டிலிப்பாய் வட்டம், ஆனைக் [2ஆம் பக்கம் பார்க்க]

## கொள்ளையரின் சூட்டுக்கு பொலிஸ் அதிகாரி பலி

பண்டாரவளையில் சிற்றுண்டிச்சாலை ஒன்றில் இடம் பெற்ற துப்பாக்கிச் சமரில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் பலியானார். சிற்றுண்டிச்சாலையில் நடைபெற்ற இச்சம்பவம் தொடர் (10 ஆம் பக்கம் பார்க்க)

"மரணம் ஒருதடவைதான் வரும். அதற்காக மானத்தை விற்றுச் சீவிக்க முடியுமா? இறப்புக்குப் பயந்து இனத்தையே அழியவிட முடியுமா?

- திலீபன்

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்,

யாழ். மாவட்டம்

(இ-7435)

## வரி விளம்பரம்

### வாங்குகிறோம்

சுத்தமான வேப்பம் விதை வேப்பம் கோது, இலுப்பம் விதை விலைக்கு வாங்குகிறோம் மிலனைவற (சி.7461)

### வடமராட்சியில நீமியாஉரம்

மணவளம பெருக்கிப்பயிர் பாதுகாப்புத் தரும் நீமியா உரம. வேப்பம் பிண்ணாக்கை ஆதாரமாககொண்டது. கிலோ பக்கற் 17- ரூபா. வடமராட்சி விவசாயிகளின் தேவைக்காக புலோலி, அம்பன் கமநல சேவைநிலையத்தில் விற்பனையாகிறதுமிலக்கவை (சி-7469)

### இதோ::04

இன்னும் சில தினங்களில் மாறும் மக்கள் சஞ்சிகையின் ஆடி. புரட்டாதி இதழ் ஈழம் சிறுகதை கவிதைமற்றும கட்டுரைகளுடன் வெளிவருகின்றது ரூபா 10!, (6080

### விற்பனைக்குண்டு

இங்கிலண்டபெற்றர் எஞ்சின் குதிரை இழுவை 8 RPM 2800 யின் சக்தி இழுவை 2 நேரில் தொடர்பு கொள்ளவும் S.S R. அரிசி ஆலை டச்சு வீதி 1-ம் கட்டை, சாவகச்சேரி (6084)

### புலமைப்பரிசில் பரீட்சை

1994 புலமைப் பரிசில் மாணவருக்கு ஒவ்வொரு சனிக்கிழமையும் பி.ப.3மணிக்கு நடாத்தப்படும் தொடர் பயிற்சிப் பரீட்சையின் 11 வது பரீட்சை 25 09 93 பி.ப.3 மணிக்கு நடைபெறும். வினாத்தாள் பெற்றுக் கொள்ளலாம் எடிசன் அக்கடமி யாழ் இந்துக்கல்லூரி அருகில K.K S. வீதி யாழ்ப்பாணம். (6085)

### விற்பனைக்கு

ஆர்கானிக், மெடீரியா மெடிக்கா இரண்டு பாகங்கள், பயோகெமிஸ்டிரி வைத்திய முறை ஆகியன இலங்கை ஹேமியோபதி சபையின் பாடத்திட்டத்திற்கு அமைவாகத்தயாரிக்கப்பட்டது கிடைக்கும் இடம் வட இலங்கை ஹேமியோபதிசங்கம் 35நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (5910)

### தியாகி

கோட்டை மூத்தவிநாயகர் கோவில் முன்றல், மானிப்பாய் சிற்றூர் முகாம் மக்கள்; உடுவில் /தெல்லிப்பளை வட்டம், சுன்னாகம் சிவன் கோவில் முன்றல் வர்த்தகர்சங்கம், ஊழியர் சங்கம்; யாழ்ப்பாணம் வட்டம நல்லூர் கந்தசாமி கோவில் வீதி, கண்டுக்குழி சிற்றூர் மக்கள்; நல்லூர் வட்டம, நல்லூர் கந்தசாமி கோவில் வீதி கொக்குவில்/கந்தர்மடம் மக்கள்; கரவெட்டி வட்டம், நெல்லியடி இழக்கு சாமியன் அரசடி, துன்னாலை இழக்கு தெற்கு சிற்றூர் மக்கள்; உடுப்பிட்டி வட்டம், உடுப்பிட்டி மத்தி வைரவர் கோவிலடி, கரணவாய் வட மேற்கு. சமரபாகு சிற்றூர் மக்கள்; பருத்தித்துறை வட்டம், அல்வாய் முத்துமாரியம்மன் கோவிலடி, அல்வாய் மேற்கு, வடமேற்கு சிற்றூர் மக்கள்; பளை வட்டம், பளைபிரதேசசபைமுன், தெ. ப. பொ. உ. வி. சங்க உறுப்பினர், தையல் பயிற்சி நிலையம், மயூரன் கல்விக் கூடம், செஞ்சிலுவைச் சங்கம்; கொடிகாமம வட்டம், புகையிரத நிலைய அருகாமை, விடத்தற்பளை, இளாலி கடற்தொழிலாளர் சங்கம், தென்மேலி மேற்கு மக்கள்; சாவகச்சேரி வட்டம், மணம்குணாய் பிள்ளையார்கோவில் முன்றல், சாவநகர் சரசாலை, நுணாவில், மட்டுவில், மீசாலை மேற்கு தையல் நிலையம், சீலன் கல்வி நிலையம், கேம்பிறிஜ் கல்வி நிலையம், டஞ்சு கல்வி நிலையம்; கைதடி வட்டம், கைதடிச்சந்திக்கு அருகாமையில், மறவன் புலோ சிற்றூர், கைதடிநாவற்குழி ச. ச. நிலையம், கைதடி நாவற்குழி மாதர் சங்கம், எவரெஸ்ட் கல்வி நிலையம், கலைமகள் கல்வி நிலையம்; தீவக கோட்டம், நல்லூர் கந்தசுவாமி கோவில் வீதி, தீவக தச்சுத் தொழிலாளர் சங்கம், வேலணை சரஸ்வதி வித்தி, அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம், புங்குடுதீவு அம்பாள் விளையாட்டுக் கழகம்.

பங்குபற்றும் பாடசாலைகள்

மண்டைதீவு றோ. க. த. க., எவரெஸ்ட் கல்வி நிலையம், கலைமகள் கல்விநிலையம். சீலன் கல்வி நிலையம், லோகநாதன் கல்வி நிலையம், அல்வாய் வடக்கு இ த க., வதிரி மெ மி த. க. பாடசாலை, உடுப்பிட்டி சைவப் பிரகாச, வதிரி இருதயக் கல்லூரி வேதாரணியேஸ்வரா, கலட்டி றோ. க. த. ஆண்கள் தொல்புரம் அ மி த. க. பாடசாலை, அராலி அ மி. த. க. பாடசாலை, நுணாவில் அ மி த.க. பாடசாலை, சுந்தரமூர்த்தி வித்தியாலயம் மலாகம் மகாவித்தியாலயம், தெற்கு அளவெட்டி த க. பாடசாலை. வீமன்காமம் மகாவித்தியாலயம், பன்னாலை கனகசபை, கொல்லன் கலட்டி சை. த. வி, மயிலிட்டி வடக்கு கலைமகள் வித்தி, காங்கேசன் துறை ம.வி, கமல் அக்கடமி, கருணா கல்வி நிலையம், நவாலி கல்வி நிலையம்.

சிரமதானப் பணிகள்

கோப்பாய் வட்டம், புத்தூர் ஆக்காச்சி குடியிருப்பு துப்புரவு; உடுவில் / தெல்லிப்பழை வட்டம், மல்லாகம் அளவெட்டி வீதி துப்புரவு. பெருமாள் கடவை, கும்பளாவளை முகாம் மக்கள்; உடுப்பிட்டி வட்டம் சந்தையும் அதை அண்டிய பகுதியும் மாவீரர் படங்கள் வைத்துள்ள பகுதியும் துப்புரவுசெய்தல் நாவலர் ச ச. நி இராசலிச. ச. நிலையம் உறுப்பினர்கள், மக்கள்; பருத்தித்துறை வட்டம், பொலிகண்டி ஆலீப் வீதி, துப்புரவு பாரதி ச ச. நிலைய உறுப்பினர் பொதுமக்கள், தீவகக் கோட்டம் மயூரன் குடியிருப்பு கிணறு இறைத்தல்.

## 10-ம்மாத நினைவலைகள்



வீரநில விளைவாக!

1973-05 03

வீரநில வித்தாக!

1992 11-24

### 2-ம் லெப்டினன்ட் கௌரி

(செல்வி அமுதினி வீரகத்தி)

கௌரியாகி களமாடி
கல்லறை தேடி காவியமாகி
காலங்கள் ஐயிரண்டு திங்களோடி
நினைவோடும் மண்ணிலுனைத் தேடுகின்றோம்
நிலவோடும் விண்ணிலுனைக் காண்கின்றோம்.

முரளி வீதி. உன் பிரிவின் துயரில்
ஆவரங்கால். குடும்பத்தினர்.

(6086)

BOARD OF DIRECTORS JAFFNA COLLEGE

**THE INSTALLATION OF**

Mr. G Rajanayagam,

B. A. (Lond,) Dip Ed, M. A. (Princeton)

as

PRINCIPAL, JAFFNA COLLEGE

at 3-30 p. m.,

on

Saturday 9th October, 1993

by

The Bishop in Jaffna, C. S. I.

Cathedral Church, Vaddukoddai.

YOUR PRESENCE & PRAYEPS WILL BE GREATLY APPRECIATED.

C. V. Selliah,
Secretary

(6083)

## நினைவு கூருகின்றோம் ...
## 1993-09-24

1990ஆம் ஆண்டு இதே தினத்தில் முள்ளைத்தீவில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட மிதிவெடி விபத்தில் எமைப்பிரிந்த-

**நேசன்** (நாராயணபிள்ளை தவனேசன் - கந்தளாய்- திருமலை)

யாழ் - முற்றிரைச்சந்தை, நல்லூர், உடுப்பிட்டி மற்றும் பகுதிகளில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் கொல்லப்பட்ட 02 பொதுமக்கள்.

1991ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**2 ம் லெப். திலீபன்** (ஜெகநாதன் கௌமதன்-பெரியகல்லாறு 01 - மட்டு)

**2-ம் லெப். ரஞ்சன்** (சுந்தரம் சண்முகநாதன் - மாமிகேணி, வாழைச்சேனை-மட்டு)

**தமிழ்வாணன்** (இராசதுரை குலம் - முகத்துவாரம்-மட்டு]

**அற்புதன்** (கணபதிப்பிள்ளை மகேந்திரன் - தம்பலகமம் - திருமலை)

**2-ம் லெப். குமரன்** (தில்லைனார் உதயகுமாரன் - 132, செல்வபுரம் - வவுனிக்குளம்)

**கப்டன் வரதப்பா** [தங்கவேலாயுதம் விஜயராஜ் - மயிலிட்டி - யாழ்]

**2-ம் லெப். மகிழன்/டான்சன்** (இராமலிங்கம் சண்முகம் பொலகுமார் - கொழும்புத்துறை- யாழ்]

**யசீர்** [சியாமளாதேவி ஆனந்தன்- அரசடி, தொண்டமானாறு-யாழ்)

**விக்னம்** [இளங்கோ பரணிதரன்-வதிரி, கரவெட்டி- யாழ்)

1992ஆம் ஆண்டு மட்டு- வண்ணாத்தியாறுப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவெய்திய-

**சித்திரா** [சுந்தரலிங்கம் கமலசூரியன்- சோனகத்தெரு- மட்டு]


**நவபாலன்** [சிவராசா சுதாகரன்- மொறக்கொட்டாஞ்சேனை மட்டு]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி-7478]

## வீர நினைவாகி எம் நெஞ்சமதில்...


மணலாற்றில் வித்தாக
**கப்டன் வரதப்பா**
தங்கவேலாயுதம் விஜயராஜ்
பிறப்பு:
15-12-1972
வீரச்சாவு:
24-09-1991

முருகுப்பிள்ளை
தங்கவேலாயுதம்
பிறப்பு:
09-09-1946
துரோகிகள் அழிப்பில்:
19-06-1989

மண்டைதீவில்வித்தாக
**வீரவேங்கை ராஜ்**
தங்கவேலாயுதம் ஜெயராஜ்
பிறப்பு
26-08-1976
வீரச்சாவு:
25-08-1990

துரோகிகளை இனம் கண்டாய் இனம் காக்க வந்தோரை
அரவணைத்தாய் அதனால் அணைத்தாய் சாவை
தந்தைக்குற்றகதி கண்டு கலங்கவில்லை மைந்தர்கள் - மாறாக
வேங்கைகள் அணிசேர்ந்தார் விரட்டினர் வீணரை
வீரசொர்க்கம் கண்டனர்; விரைவில் தமிழீழம் மலரும்
கரம் கூப்பி தொழுகின்றோம் கண்ணீர் காணிக்கை.

தாழையடி பயிலிட்டி

மாவீரர் வீதி. (காரைக்கால் வீதி) - குடும்பத்தினர்
இணுவில் கிழக்கு, கோண்டாவில். [இ]

# ஏழை மக்களின் நிவாரணத்தை ஏப்பம் விடும் ஐ. நா. அதிகாரிகள்

**பாலகுமாரன்**

இன்று ஐ நாவின் அமைதிப்பணிகள் மட்டும் கண்டனத்திற்குள்ளாகவில்லை ஐ நா நிருவகிக்கப்படும் முறைமை, அதன் நிதி செலவழிக்கப்படும் விதம், பெருத்த வேதனத்தில் பணியாற்றும் அதன் பணியாளர், தூசுபடியும் அதன் பல நூறு அறிக்கைகள், தீர்மானங்கள் எவ்வளவு பலத்த கண்டனத்திற்குள்ளாகின்றன இவை தொடர்பாக மேற்குலகின் புகழ்பெற்ற பத்திரிகைகள் பல விசாரணைகள், புலனாய்வுகள் போன்றவற்றை நடத்தி பல முறைகேடுகளை அம்பலப்படுத்துகின்றன. ஐ. நாவின் செயற்பாடுகள் குறித்து மேற்குலகில் நிலவும் முரண்பாடுகள் இவ் அம்பலப்படுத்தல்கட்கு காரணமாக அமைந்தபோதும் வெளியாகும் வீண்விரயங்கள், பாரிய முறைகேடுகள், நிதி மோசடிகள் பற்றிய தகவல்கள் எவரையும் கலவரத்திற்கு உட்படுத்தக்கூடியவை. பாரதூரமான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் இப்பத்திரிகைகள் ஐ நாவின் நம்பகத்தன்மையையே கேள்விக் குறியாக்குகின்றன. ஐ.நா என்றால் உலகப் பொதுமகன் ஒருவன் மனதிலே ஆழப்பதிந்துள்ள உயர்வான, மேன்மையான வடிவத்தை இவை சிதைக்கக் கூடியவை. ஏனென்றால் ஒரு பிரச்சினையின் சர்வதேசப் பரிமாணம், அதன் தாக்கம் போன்றவை அப்பிரச்சினையில் ஐ நா வின் ஈடுபாட்டைப் பொறுத்தே தீர்மானிக்கப்படும் இன்றைய நிலையில் இச் செய்திகள் பெருத்தஅதிர்ச்சியை தோற்றுவிக்கக் கூடியவையாகின்றன.

''ஐ நா வின் மூத்த அதிகாரிகள் பகலில் உலக ஏழை மக்களிற்காக கண்ணீர் வடிக்கிறார்கள் இரவிலோ அம் மக்களின் கண்ணீரை துடைக்க பயன் படுத்தவேண்டிய பணத்தை தண்ணீராக செலவழித்து உல்லாசவாழ்க்கைவாழ்கின்றனர்'' என்பதே இன்று ஐ நா வின் பணியாளர் தொடர்பில் முன் வைக்கப்படும் பெரும் குற்றச் சாட்டாகும். 'இற்றைவரை ஒரு ஏழை தனது ஒரு நேர உணவை தானே பெறத்தக்க வகையில் ஒரு வேலையாவது ஐ நா செய்யவில்லை என்பது அதன் காகித திட்டங்கள் தொடர்பான முறைப்பாடாகும். இன்று ஐ நா வின் உள்ளக கணக்கறிக்கைகள் நீதிகுழு அறிக்கைகள் காட்டுவன இவைதான் இன்றுதொற்றுநோயாக பரவும் மோசடிகள்; பேராசை பிடித்த அதிகாரிகளின் முறைகேடுகள்;கொழுத்த பணத்தை ஓய்வூதியமாகப் பெற்றுக்கொண்டே மறுபுறத்தில் ஐ நா. வின் ஆலோசகராக நியமிக்கப்படும் முன்னாள் ஊழியர்கள், கணக்கிடப்பட முடியாத பயணச் செலவுகள், படிகள்: ஊழலில் ஈடுபட்டோர் உயர்மட்டச் செல்வாக்கு காரணமாக தப்பித்தல், பெருமளவு பணததை வேதனமாகப்பெற்று வேலையின்றி காலம் கடத்தும் அதிகாரிகள், எவருக்கும் பதில் சொல்லத் தேவையில்லாத நிருவாகிகள் என குற்றச்சாட்டுக்கள் மலைபோல குவிகின்றன.

தற்சமயம் ஐ.நா வில்காகிதமலையாக குவியும் தேவயற்ற வல்லுநர் அறிக்கைகள், அவற்றினை ஆராய்வதிலே காலம் கடத்தும் உயர் அதிகாரிகள், மொத்தத்தில் ஐ. நா ஒரு காகித ஆலை எனச் சொல்லக் கூடிய நிலை, என ஐ. நா. குறித்தான விசாரணை அறிக்கைகள் குற்றச்சாட்டுக்களைப் பட்டியலிடுகின்றன. இவ்வாறாக இன்று உலகில் எவருக்கும் கிட்டாத ஏன் பாரிய பல்தேசவர்த்தக நிறுவனபணியாளர்கட்கே கிட்டாத-உயர் வாழ்க்கைத் தரத்தினைகொண்ட ஐ நா. அதிகாரிகள் தண்ணீராகச்செலவழிக்கும்பணம்,ஜெனிவாவில்உள்ள பல ஐ நா நிறுவனங்களின் டாம்பீகச் செலவுகள், இங்கு பணியாற்றும் அதிகாரிகளின் பெருத்த பணச் செலவினை ஏற்படுத்தும் மதுபான கேளிக்கை விருந்துகள்-இவற்றிற்கு செலவழிக்கும பணத்தைக் கணக்கிட முடியாத நிலை - இவை எல்லாம் சேர்ந்து இன்று ஐ. நா வைப் பெருத்த பண நெருக்கடிக்குள் தள்ளிவிட்டுள்ளன. இதன் காரணம் பற்றியே அண்மைக் காலமாக ஐ. நா. செயலாளர் அபாய அறிவிப்புக்கள் செய்து வருகிறார் சென்ற மாதம் அவர் விடுத்த அவசர வேண்டுகோளில் என்றுமே இல்லாத நெருக்கடியைத் தான் எதிர்நோக்குவதாக ஒரு மாதச் செலவிற்கே தன்னிடம் பணமில்லையென்றும் மாதாந்தச் செலவு 310 மில்லியன் டொலர். ஆனால் கையிருப்போ 380 மில்லியன் டொலர் மட்டுமே என்று குறிப்பிட்டார். 184 அங்கத்துவ நாடுகளில் 150 நிலுவைப் பணத்தினைச் செலுத்தவில்லையென்றும் குறிப்பாக அமெரிக்கா பெருத்த கடன்காரன் (836 மில்லியன் டொலர்)என்றும் அடுத்ததாய் ருஷ்யா 509 மில்லியன் டொலராகச் செலுத்த வேண்டும் என்றும், அடுத்த நிலையில் யப்பான், செருமனி இருப்பதாகவும் குறிப்பிட்டார். இவ்வாறாக பணமில்லையே என செயலர் புட்றஸ் காலி அலறும் கட்டத்திலே ஐ. நா வின் முறைகேடுகள் பற்றி தகவல்கள் வெளிவந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

1948ஆம் ஆண்டு அமைதியை அடிப்படையாகக் கொண்டு புதிய உலகை உருவாக்க உருவாக்கப்பட்ட ஐ நா அன்று மொத்தம் 1500 ஊழியர்களை மட்டுமே கொண்டிருந்தது. இன்று ஐ. நாவின் நியூயோர்க்தலைமைச் செயலகதில் மட்டும்14,000நிரந்தர ஊழியர் உண்டு. 48 வருடகால விரிவாக்கத்தின் விளைவு-சர்வதேச ரீதியாக 50 000க்குமேற்பட்ட பணியாளர். 9600 ஆலோசகர்கள் இவ்வாண்டு 50க்கு மேற்பட்ட துணை அமைப்புக்கள் 100க்கு மேற்பட்ட பல்வேறு குழுக்கள், A-Zவரை பெயரிடப்பட்டுள்ள பல்வேறு தற்காலிக அமைப்புக்கள் உள்ளன. இவற்றை விட டோக்கியோவில் ஐ.நாவின்பல்கலைக்கழகம் டொமினிக்கன் குடியரசில் பெண்களுக்கான ஆய்வு பற்றிய மையம் என சர்வதேச நாடுகளில் பல்வேறு அமைப்புக்கள் இயங்கி வருகின்றன அத்தோடு 2700 பணியாளர்களைக் கொண்ட பொருளாதார ஆணைக்குழுக்கள் பல்வேறு நாடுகளில் இயங்கி வருகின்றன. இவையாவற்றையும் நிர்வகிக்க அங்கத்துவ நாடுகளால் வருடாந்தம் 700கோடி (7மில்லியன்)ஸ்டேர்லிங்பவுண் வழங்கப்படுகின்றது.உலகமோ இப்பணம் சீரான, செம்மையாக செலவழிக்கப்படுவதாக- பட்டினியால் வாடும் குழந்தைகட்கு உணவு அளிக்க இயற்கை அழிவால் துயருறும் மக்களைப்பேண மோதல்களால் மடியும்மக்களிற்கு அமைதியைக்கொண்டுவர பயன்படுவதாக நம்புகின்றனர். ஆனால் இது உண்மையல்ல என்கிறது. இலண்டனில் சண்டேரைம்ஸ் பத்திரிகை எரிகிற வீட்டில் பிடுங்கியது இலாபம் என்பது போல் ஐ.நாவின் உயர் அதிகாரிகள் கண்ணீராலும் செந்நீராலும் தோயும் மக்களை காப்பாற்றப்பயன்பட வேண்டிய பணத்தைதாமே சுருட்டி தமது சுகபோக, ஆடம்பர வாழ்க்கைக்குப் பயன்படுத்தும் இந்நிலையே நிகழ்வதாக குற்றம்சாட்டுகின்றது.

1987ஆம் ஆண்டுஐ.நா.வின் தலைமைச் செயலகத்தின் நிலக்கீழ்வாகனதரிப்பிடத்தை வெப்பமூட்ட பெரும் தொகைப் பணம் செலவழிக்கப்பட்டது. இதைக் கண்டு மனம் பொறுக்காத ஐரோப்பியர் ஒருவர் வாகனங்களை வெப்பமாக வைத்திருக்க செலவழிக்கப்பட்ட இப்பணம் வாகனங்களை வைத்திருக்க வழியற்ற மக்கட்கு பயன்பட வேண்டிய பணமல்லவா என்றார்.

ஐ. நாவில் நிலவும் பாரிய முறைகேடுகள் பற்றிய தகவல்கள் இப்போது வெளிவரத் தொடங்கிவிட்டன குறிப்பாக ஐ நாவின் துணை அமைப்பான UNHCRஎனப்படும் அகதிகளிற்கான ஐ நாவின் உயர் ஆணையகம் தொடர்பாக அங்கு நிலவும் மோசமான பணமோசடிகள் தில்லுமுல்லுக்கள் பற்றி ஐ நா. வின் நிதிக் குழுவே சுட்டிக்காட்டியுள்ளது பருசத்தாலும், பட்டினியாலும், இயற்கையழிவாலும்போராலும்பாதிக்கப்படும் மக்கட்கானநிதி பெருமளவில் UNHCRபணியாளர்களால்சுருட்டப்பட்டவிதம் அதிர்ச்சியை ஊட்டும் செய்திகள் ஆகும் சில காலத்திற்கு முன்பு 1989ஆம் ஆண்டு இடை நிறுத்தப்பட்ட UNHCRஉயர் ஆணையர் நின் பியரிகொக் பல மோசடிகளில் ஈடுபட்டது. அம்பலப்படுத்தப்பட்டுள்ளது ஒருதடவை இவர் தனக்கும் மனைவிக்குமாக விமானச் செலவாக 3 இலட்சம் ஸ்டேர்லிங் பவுண்சைப் பெற்றுள்ளார். இன்றும் வருடாந்தம் 1 இலட்சம் பவுணை ஓய்வூதியமாகப் பெறும் அவர் இதுவரை எப்பணத்தையும் திருப்பிச் செலுத்தவில்லை. அதே போலவே உகண்டாவிற் UNHCR பிரதிநிதியாக இருந்த லுக்கா என்பவர் செய்த முறைகேடுகள் அளவற்றவை.இதன்காரணமாகஅவர் 1991ஆம் ஆண்டு பதவிநீக்கப்பட்டார் இவரது காலத்தில் உணவுக்களஞ்சியத்திலிருந்துஇரண்டரைஇலட்சம் ஸ்டேர்லிங் பவுண் பெறுமதியான உணவு வகைகள் $1\frac{1}{2}$ இலட்சம் பவுண் பெறுமதியான தானியங்கள் மாயமாக மறைந்தன. அதைவிட 3 இலட்சம பெறுமதியான வாகனங்களை காணவில்லை. இவ்வாறாக இவர் ஊழலில் ஒரு சாதனையே புரிந்துள்ளார். இவ்வாறாக பல ஊழல்களில் இவர் தொடர்புபட்ட போதும் இவற்றிற்கு ஆபிரிக்க வட்டாரத்தில் உள்ள உயர்மட்டச் செல்வாக்கு காரணமாக வேலை போனதோடுசரி, வேறொன்றும் நிகழவில்லை. அண்மையில கூட பொசுனியாவில் புதிய ஊழலொன்றில் UNHCR சம்பந்தப்பட்டதாக தகவல் வெளி வருகின்றது கம்போடியாவில் இதே நிலை தான். இவற்றினை விட கோடிக்கணக்கான ரூபாய்கள் பெறுமதியான கூடாரங்கள் படுக்கைகள் உணவுப் பொருள்கள் உடுபுடைவைகள் என பல பொருட்களைப்பெற ஒப்பந்தக்காரர்கள் நியமிக்கும் வகையில் பலவித ஊழல்கள் நிலவுவதும் பல்வேறு UNHCR பணியாளர்கட்கே இத்தகைய நடவடிக்கையோடு இரகசியத் தொடர்புகள் இருப்பதும் தரமற்ற பொருட்கள் விநியோகிக்கப்படுவதும் UNHCR இன் பணிக்கே களங்கம் கற்பிப்பனவாக அமைகின்றன.

இத்தோடு ஐ. நாவில் பல நூறு ஆலோசகர்கள் செயலாளரினது பல தரப்பட்டதுறைகட்கு நியமிக்கப்படுவது பெரிய கேலிக் கூத்தாகி விட்டது. இத்தகைய பதவிகள் பெறுவதற்காக பல்வேறு முன்னாள் ஐ நா. ஊழியர்கள் கொண்ட குழுக்கள் பழைய மாணவர்கள் சங்கங்கள் போல இன்று இயங்குகின்றன. அத்தோடு பொருத்தமற்ற -அவசியமற்ற பல திட்டங்கள் தொடக்கி அதனால் ஏற்படும் வீண் செலவுகட்கும் ஐ. நா வில் பஞ்சமில்லை. 1984-ம் ஆண்டு கடும்பஞ்சம் எதியோப்பியாவில் நிலவிய போது ஏனைய நிவாரண உதவி அமைப்புக்கள் பணத்துக்கு தவித்த போது ஐ நா. எதியோப்பியாவில்தனது பொருளாதார ஆணைக்குழுவிற்கு 50 மில்லியன் பணம் செலவில் கட்டடம் கட்ட ஆரம்பித்தது. இன்று 9 வருடங்கள் கழித்து. இன்னமும் கட்டடம் முடிந்தபாடில்லை செலவோ 70மில்லியன் பவுண் ஆகிவிட்டது. எனவே இப்போது எழும் பிரதான கேள்வி மக்களின் நன்மைக்காக வழங்கப்படும் நிதியில் எவ்வளவு சதவிகிதம் அம் மக்களைச் சென்றடைகின்றது. என்பதே. உரோமில இயங்கும் பளிங்குக்கல் பதித்த 6மாடி கட்டடமொன்றில் இயங்கும் உணவு விவசாய நிறுவனத்தில் (F.A O.) மொத்த ஊழியர் தொகை 7700 ஆகும். உலக உணவுப் பஞ்சத்தை அகற்ற இதற்கு இரண்டு ஆண்டு வரவு திட்டப்படி வழங்கப்படும் 860 மில்லியன் பவுணில் $\frac{1}{3}$ பங்கு உரோமில் இயங்கும் செயலகத்திற்கே செலவாகின்றது பாரிசில் இயங்கும் யுனெஸ்கோவின் அலுவலகத்திற்கோ அதன் வழமையான வரவு செலவுத் திட்டத்தில் 80வீதம் ஒதுக்கப்படுகின்றது. இதைப் போலவே 39 அலுவலகங்கள் உலகமெங்கும் கொண்டுள்ள I.L.O எனப்படும் சருவதேச தொழில்தாபன வர்த்தகம் தொடர்பான NCTAD அமைப்பு நிலையம் இவ்வாறே உள்ளன இவ்வாறாக ஐ நா. வின் வீண் விரயப் பட்டியல் நீள்கின்றது. மோசடிகள், முறைகேடுகள் தொடர்கதையாகின்றன. இவை ஐ நா வின்இருண்டபக்கம் இங்குள்ள வியப்பு என்னவென்றால் இத்தகைய சீர்கேடுகளை இது வரை தடுக்க எடுக்கப்பட்ட எம்முயற்சியும் வெற்றி பெறாத வண்ணம் பார்த்துக் கொள்வதிலும் ஐ நாவின் ஒரு சாரார் இதுவரை வெற்றியடைந்துள்ளமையே.

இன்று உலகில் அதி உயர் செல்வாக்குள்ள அதிகார பீடமாக கருதக்கூடிய பாதுகாப்புச் சபையின் நிலையைப்பாருங்கள் வெறுமனே தீர்மானங்களை நிறைவேற்றுவதே அதன் தொழிலாகிவிட்டது. தீர்மானங்களை நிறைவேற்றுவதா அல்லது தீர்வுகளை காண்பதா இன்று பாதுகாப்புச் சபையின் கடமை என்பதே மயக்க நிலையாகிவிட்டது. இன்று 800 வரிசையில் தீர்மான இயக்கங்கள் வந்து விட்டன. பாலத்தீனிய பிரச்சினை தொடர்பான தீர்மானங்கள் 242, 338 ஆகிய இரண்டுமே இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. இவை பாலததீனிய மக்களின் தாயக உரிமையை ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து இசுரேல் வெளியேற வேண்டிய நிலையை வலியுறுத்துபவை. இன்னும் சில தீர்மானங்கள் கேலிக கூத்தாகிவிட்டன சோமாலியாவின் போர்ப் பிரிவு எனப்படும் அய்டிட்டை தொடர்பான தீர்மானங்களை சட்ட ரீதியானவை தானா என ஐ நா வே மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டிய நிலைஇவைஎல்லாவற்றையும்விட பொசுனியச் சிக்கல் தொடர்பாக பாதுகாப்புச் சபை 1992-ம் ஆண்டிலிருந்தே தீர்மானங்களை எடுத்து தள்ளிய வண்ணமே உள்ளது. தீர்மான இல 713 பின் இது வரை 48 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுவிட்டன தீர்மானஇல 781 பொசுனியாவுக்கு மேலாக போர் விமானங்கள் பறப்பதை தடை செய்தன. ஆனால் பொசுனியாவில் உள்ள சேர்பிய படைத்தளபதி உலங்கு வானூர்தியைப் பயன்படுத்தி தாக்குதல் மேற்கொண்டார். ஐ நா. அதிகாரிகளைச் சந்திக்க அதே வானூ

(8ஆம் பக்கம் பார்க்க)

## திலீபன் மாமா

மாமா! மாமா!! திலீபன் மாமா
கோட்டையை இன்று பாருங்கள்-அங்கு
புலிக்கொடி பறப்பதைப் பாருங்கள்-உங்கள்
தாகம் தீர்த்துக் கொள்ளுங்கள!

வீதிகள் தோறும் உங்கள் உருவம்
நிமிர்ந்து நிற்பதைப் பாருங்கள் பாலர்
நாங்கள் ஆடியும் பாடியும் - உங்களை
நினைவு கொள்வதைப் பாருங்கள்!

கோட்டையில் உங்கள் உறுதி அறிந்தோம்!
வல்லையில் உங்கள் வீரம் தெரிந்தோம்!!
நல்லையில் உங்கள் தியாகம் அறிந்தோம்!!!
பாலர் நாங்கள் உறுதி பெற்றோம்!!!!

– செல்வி காயத்திரி
மயிலிட்டி.

# கொழும்பில் தமிழரின் அவலவாழ்க்கை; எவரும், எப்பொழுதும் கைதாகலாம்

நள்ளிரவு வேளைகளில் தமிழர் அதிகமாக வாழும் இடங்கள் என அடையாளம் காணப்பட்ட பகுதிகள் சுற்றி வளைக்கப்படுகின்றன. ஒவ்வொரு வீடாக கதவு தட்டப்படுகிறது. பொலிசில் பதிவு செய்து பெறப்பட்ட அத்தாட்சிப் பத்திரங்கள் தூக்கி வீசப்படுகின்றன. இளைஞர்கள், யுவதிகள் அனைவரும் பெரிய பொலிஸ் வாகனங்களில் பலவந்தமாக ஏற்றப்பட்டு அண்மையிலுள்ள பொலிஸ் நிலையங்களிற்கு கொண்டு செல்லப்பட்டு ஆடுமாடுகள் போல் அடைக்கப்படுகின்றனர்.

★ ★

வெளிநாடு செல்லவென முகவர்களிடம் பணம் செலுத்திவிட்டு பெருமளவு வாடகை செலுத்தி தங்கியிருக்கும் விடுதிகள் இரவு பகல் பேதமின்றி சுற்றி வளைக்கப்படுகின்றன. 'தேசிய அடையாள அட்டைகள் பரிசீலிக்கப்பட்டு தமிழர் என அடையாளம் காணப்படுவோர் வாகனங்களில் ஏற்றப்பட்டு அடையாளம் காணப்படாத இடங்களிற்கு கொண்டு செல்லப்படுகின்றனர்.

★ ★

முக்கிய சந்திகளில் தனிப்பட்ட போக்குவரத்து வாகனங்கள் பொலிசாரால் மறிக்கப்படுகின்றன. வாகனங்களில் பயணம் செய்வோரின் பொதிகள் தீவிரமாகப் பரிசீலிக்கப்படுகின்றன. வடக்கு - கிழக்கைச் சேர்ந்த இளைஞர் யுவதிகள் இறக்கப்பட்டு வரிசையில் நிறுத்தப்படுகின்றனர். பின்னர் இவர்கள் பொலிஸ் நிலையங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றனர்.

★ ★

சிறிலங்காவின் தலைநகர் கொழும்பில் தமிழர் கைது செய்யப்படுவது அன்றாட வழக்கமாகி விட்டது. கொழும்பு நகரப் பகுதியிலும் புறநகர் பகுதிகளிலும் இத்தகைய கைதுகள் சர்வசகஜமாக நடைபெறுகின்றன. தமிழர் என்றால் போதும் வயதெல்லை ஆண்-பெண் வேறுபாடின்றி ஆங்காங்கே இந்தக் கைது செய்யும் சம்பவங்கள் யூன் மாதத்திலிருந்து மிகத் தீவிரமாகியுள்ளன. அரச சொத்துக்களுக்கும், உயர்மட்ட அரசியல்வாதிகளுக்கும் ஆபத்து ஏற்படாமல் காப்பாற்றிக் கொள்ளவே இவர்கள் கைது செய்யப்படுவதாக நியாயப்படுத்தப்படுகிறது.

''அஞ்சினவன் கண்ணுக்கு ஆகாயம் எல்லாம் பேய்'' என்பது போல் விநோதமான பயத்தினால் பாதுகாப்புப்படையினரும் பொலிசாரும் தமிழர்களை வகைதொகையின்றிக் கைது செய்கின்றமையைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இவ்வாறு கைது செய்யப்படுபவர்கள் விசாரணை என்ற பெயரில் நீண்டகாலம் தடுத்துவைக்கப்படுவதும், சித்திரவதைப்படுத்தப்படுவதும் ஒரு சாதாரண நிகழ்ச்சி ஆகிவிட்டது.

சிறிலங்கா அரசாங்கத்தினால் வழங்கப்படும் தேசிய அடையாள அட்டை, பொலிஸ் நிலையங்களினால் உறுதிப்படுத்திக் கொடுக்கப்படும் வதிவிட உறுதிப்பத்திரங்கள் மற்றும் சட்டரீதியான உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் இருந்தபோதும் கூட சந்தேகம் எனக்கூறி கைது செய்யப்படுகின்றமையை எவரும் தவிர்க்கமுடியாது.

கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸ் நிலையங்களிலுள்ள விளக்க மறியல் கூண்டுகளிலும் ஏனைய முகாம்களிலும் நீண்ட நாட்களாக விசாரணையின்றி தடுத்துவைக்கப்பட்டு மிருகத்தனமாகவும் அரக்குறைவாகவும் நடத்தப்படுகின்றனர். இதனால் பல தமிழ் இளைஞர்கள் விரக்தியின் எல்லைக்குத் தள்ளப்பட்டு ஏனோ தானோ என்ற வாழ்வை நடத்துகின்றனர். பலர் மனரீதியாகப் பாதிக்கப்பட்டும் உள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட தமது உறவினரைத்தேடி அலையும் ஒரு கூட்டமும் கொழும்பு நகரில் சர்வசாதாரணம். தமது உறவினர்? எந்த இடத்தில் கைது செய்யப்பட்டார்? யாரால் கைது செய்யப்பட்டார்? எங்கிருக்கின்றார் எப்படி பார்ப்பது என்ற பலவேறு பிரச்சினைகளை இவர்கள் எதிர்நோக்குகின்றனர். பலவாரமாக கைது செய்யப்பட்டவர்களை காணமுடியாமலும் இருக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பெரும்பாலும் விடுதிகளிலும் மற்றும் தமிழர் அதிமாக வாழும் தெகிவளை வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, கொள்ளுப்பிட்டி, கொம்பனித்தெரு, புறக்கோட்டை, தெமட்டகொடை, பாலத்துறை, பொரளை, மாளிகாவத்தை, கொட்டாஞ்சேனை, மருதானை, மட்டக்குளியா, நீர்கொழும்பு, வத்தளை, பேலியாகொட, ஊருகொடவத்தை, கிராண்பாஸ் போன்ற இன்னும் பல்வேறு பகுதிகளிலும் பிரதான நகரங்களை இணைக்கும் பிரதான வீதிகளிலும் தமிழர்கள் கைதாவது தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுவது, அவர்கள் கட்டாயமாக நடமாட வேண்டிய வேலைத்தலங்களுக்கு செல்லும் காலை, மாலை நேரங்களிலும், இரவு வேளைகளிலும் இடம்பெறுகின்றது.

இரவு வேளையில் இருப்பிடங்களைச் சுற்றிவளைத்து நித்திரை கொள்ளும் போது கைது செய்யப்படுவது அங்கு வாடிக்கையாகிவிட்டது. பொலிஸ் நிலையங்களின் வாசலில் பெரிய பொலிஸ் வண்டிகளில் வயது வேறுபாடு இன்றியும் ஆண் பெண் என்ற வேறுபாடு இன்றியும் தமிழர்கள் கைதாகிறார்கள். இந்தப் பரிதாபக் காட்சியை வேடிக்கையாகவும், ஏளனமாகவும் பார்த்து சிரிப்பவர்களும் உள்ளனர்.

**நிமலராஜன்**

இவ்வாறு கைது செய்யப்படுபவர்களில் பொலிஸ் விதிகளுக்கு அமைய பொலிசில் வதிவிடங்களையும், பெயர்களையும் பதிவு செய்தவர்களும், அடங்குவது குறிப்பிடத்தக்கதாகும். பொலிசில் பதிவு செய்ய வேண்டியது ஒரு சம்பிரதாயமே தவிர பதிவு செய்தவர்களை கைது செய்யக்கூடாது என்றில்லை என்று பொலிஸார் திட்டவட்டமாக தெரிவிக்கின்றனர்.

காலையிலும், மாலை வேளைகளிலும் வீதித்தடைகளைத் திடீரெனப் போட்டு, வாகனங்களைச் சோதனையிட்டு, வேலைத்தலங்களுக்கு செல்லும் தமிழர்களை கைது செய்வதும் ஒருவகையாகும். சில இடங்களில் இராணுவமும் இன்னும் சில இடங்களின் கடற்படையினரும் வேறு இடங்களில் விமானப்படையினரும் இக்கைது நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

இதை விட வெள்ளை வான், சிவப்பு வான் போன்ற வற்றில் ஒருவர் மட்டும் சீருடையணிந்தும் ஏனையவர்கள் சிவில் உடையிலும் வந்து தமிழர்களை கைது செய்து கொண்டு செல்கின்றனர். இவ்வாறு கைது செய்யப்படுபவர்கள் எங்கு கொண்டு செல்லப்படுகின்றனர் என யாருக்கும் தெரியாது. கைது செய்யப்பட்டு பல நாட்களின் பின்னர் தான் இவர்களை பற்றிய தகவல் உறவினருக்கு அறிவிக்கப்படுகின்றது. சில சமயங்களில் அதுவும் சந்தேகம் தான். வீதியில் நிற்கும் சாதாரண பொலிஸ்காரர் கூட சில வேளை தமிழரை கைது செய்வது போல் பாசாங்கு செய்து பணம் பறிக்கும் சந்தர்ப்பங்களும் அதிகமாகவேயுள்ளது.

கொழும்பில் அரசுடன் ஒட்டி உறவாடும் தமிழ்க் குழுக்கள் தமிழர் அதிகமாக நடமாடும் பஸ் தரிப்புகளிலும், தமது முகாம்களுக்கு அருகே இருக்கும் பஸ் தரிப்புகளிலும் நின்று தமக்கு சந்தேகம் என கூறி தமிழரை தடுத்து நிறுத்தி அடையாள அட்டையைக் கேட்டு அது அப்படி இது இப்படி என்று கூறி முகாமிற்கு கொண்டு சென்று பின்னர் இவ்வளவு பணம் வேண்டும் என பேரம் பேசும் நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர்.

கைது செய்யப்படுபவர்கள் தலையாட்டி முன்னிலையில் விடப்படுகின்றனர். இவர்களில் அரசாங்கத்திற்கு துதிபாடும் தமிழ்க்குழுக்களின் உறுப்பினர்களும் காணப்படுகின்றனர். மேலும் வவுனியா, மன்னார் மற்றும் கிழக்கு மாகாண பகுதிகளில் கைது செய்யப்பட்ட அப்பாவி பொது மக்களும் தலையாட்டிகளில் அடங்குவர். இவர்கள் குறிப்பிட்ட தொகையினருக்கு தலையாட்டினால் மட்டுமே இத்தலையாட்டிகளுக்கு விடுதலைகிடைக்கும் என பேசிக்கொள்கின்றனர்.

ஆனால் இவர்கள் தலையாட்டாது விட்டால் பல மாதகாலம் தொடர்ந்து தடுத்து வைத்து சித்திரவதைக்கு உள்ளாக்கப் படுவதாகவும் அறியமுடிகிறது.

தலையாட்டியினால் இனம் காணப்படாதவர்கள் விடுதலை செய்யப்படுவதற்கு முன்னர் அவர்களின் விரலடையாளங்கள் மற்றும் சுய விபரங்கள் பெறப்படும். எத்தனை தடவைகள் கைது செய்யப்பட்ட போதும் இதே நிலைதான். இந்த நிலையில் விடுதலை செய்வதற்கு ரூபா 5000 அளவில் பெறப்படுகின்றது.

இந்த பணம் விசாரணைக்கு என அவரின் இருப்பிடத்திற்கு வரும் விசாரணையாளருக்கு வழங்கப்பட வேண்டும். அதன் பின்னரே விடுதலையை உறுதி செய்ய முடியும். அப்படியில்லாவிட்டால் பல்வேறு சாக்குப் போக்குகளைக்கூறி ஆகக்குறைந்தது 3 மாதம் இழுத்தடிக்கப்பட்டு விடுதலை செய்யப்படுவது வழமையாகும்.

தலையாட்டியினால் இனம்காணப்பட்டால் அவருக்கு தடுத்து வைப்பதற்கான உத்தரவு பிறப்பிக்கப்படும். இவரை விடுதலை செய்வதானால் செலுத்த வேண்டிய தொகை பெரிய அளவினதாகும். இது ரூபா 50,000 வரை செல்வதுண்டு.

விடுதிகளில் உள்ளவர்கள் அடிக்கடி கைது செய்யப்படுவது வழமையான நடவடிக்கையாக அமைந்து விடுகின்றது. அனேக விடுதிகளின் உரிமையாளர்கள் தமது இருப்பிடத்திலுள்ளவர்களைப் பற்றி பொலிஸாருக்கு தகவல் கொடுத்து அதன் மூலம் பெரும் பணம் சம்பாதிக்கும் செயலில் ஈடுபட்டு வருகின்றனர். அதாவது வெளிநாடு செல்லும் ஒருவராயின் அவர் என்று வெளிநாட்டிற்கு செல்ல ஆயத்தமாகின்றார் என்பதை அவர்களின் நடவடிக்கைகள் மூலம் உணர்ந்து பொலிஸாருக்கு தகவலை கொடுக்கின்றார். இதன் பின்னர் தான் பொலிஸாருடன் கைதைப்பற்றி கதைத்து பேரம் பேசி இவரின் விடுதலைக்கு ஒழுங்கு செய்கின்றார். இதில் பொலிஸாருக்கும் இவருக்கும் எத்தனைவீதம் என ஒப்பந்தம் இருக்கும்.

இதே போன்று தான் வெளிநாட்டிலுள்ள தமது உறவினரிடம் பணம் பெறுவதற்காக செல்பவர்களைப் பற்றிய தகவல்களையும் கொடுத்து அத்தகவல் மூலம் அவர்களை கைது செய்ய உடந்தையாக இருந்து பணம் பறிக்கும் செயல் இடம்பெறுகிறது. வெளிநாடுகளுக்கு பயண ஒழுங்குகளை மேற்கொள்ளும் முகவர்களும் தகவல்களை பொலிசாருக்கு வழங்குகின்றனர். வெளிநாடு செல்ல முயல்பவர்களிடையே ஏற்படும் போட்டா போட்டியால் ஒருவரையொருவர் காட்டிக் கொடுக்கும் நிலையும் அங்கு காணப்படுகின்றது. ஒரு முகவரினால் வெளிநாட்டிற்கு பயணம் மேற்கொள்ளும் ஒருவரைப் பற்றிய தகவலை போட்டி முகவர் பொலிசாருக்கு வழங்குவது போன்ற சம்பவங்களும் இங்கு இடம்பெறுகின்றன. சுருங்கக்கூறின் தமிழர்கள் கொழும்பில் அடிமைகள் போல நடத்தப்படுவதுடன் பணம் காய்க்கும் மரங்களாகவும் காணப்படுகின்றனர். அவர்களை என்னசெய்தாலும் எவரும் கேட்கமாட்டார்கள் என்ற நிலையே அங்கு காணப்படுகிறது.

## அடிவானில் விடிவெள்ளி இடியோடு முளைக்கும்

தென்றலொன்று தீயாகி
திக்கெட்டும் சுடுகிறது
தீயைத் தன்வயிற்றிற்கு
தின்னக் கொடுத்துவிட்டு
தியாகத்தின் சிகரத்தில்
தேசத்தின் பசிதீர்க்க
தன்னுயிரைத் திரியாக்கி
தேகத்தை நெய்யாக்கி
தென்றலொன்று தீயாகி
திக்கெட்டும் சுடுகிறது.

மால்மருகன் வீதியிலே
மாணிக்க வீணையொன்று
தாகத்தின் தணலிலே
தன்னுயிரை மீட்டியொரு
கானத்தை இசைக்கிறது
ஆதிக்கப் பெரும்பசிக்கு
ஈழத்தை இரையாக்கப்
புத்தன் பிறந்த மண்ணில்
பிறந்திங்கு வந்தபடை
ஈழத்தாய் இதயத்தில்-குத்தி
இரத்தம் குடிப்பதையும்
பூத்திருந்த தாயவளின்
பொலிவழித்துச் சிதைப்பதையும்
பார்த்தவிழி பதறிச் சிவக்க
பாடையிலே படுத்திருந்து
பாரதமே நீ புரியும்
பாதகத்தை நிறுத்தென்று
தன்னுயிரை மீட்டியொரு
கானத்தை இசைக்கிறது.

புலர்கின்ற வைகறைக்கு
பூபாளம் இசைத்த குயில்
புயலாகிக் களமெங்கும்
பகைவெல்லப் பாய்ந்த புலி
விடிகின்ற தேசத்தில்
வஞ்சகமாய்ச் சூழ்ந்த இருள்
விலகாதோ எம்மைவிட்டு
விடியாதோ தேசமென்று
விடிவெள்ளி தனைத்தேடி
வேள்வியொன்று புரிகிறது.

பூ ஒன்று புயலாகிப்
பசியோடு போராடப்
பூகம்பம் எழுகின்றது
போரொன்று வெடிக்குமென்ற
பறையோசை திசையெங்கும்
அறைந்தோங்கி ஒலிக்கின்றது
அடிவானில் விடிவெள்ளி
இடியோடு முளைக்குமென்ற
நிகழ்வொன்று நெஞ்சுக்குள்
நிச்சயமாய்த் தெரிகிறது.

எஸ். உமாஜிப்ரான்

சிறுகதை

# திரும்பாத வாடைக்காற்று....

காலை வெய்யில் உச்சிக்கேறி வெப்பம் கனலாகச் சுட்டெரித்தது. வெப்பத்தின் தகிப்பால் சுற்றியிருந்த தலைப்பாகையை சினத்துடன் அவிழ்த்துக் கொண்டான். உப்பு நீரால் உவர்க்கும் வாயையும், பிசுபிசுக்கும் உடம்பையும் கழுவுவதற்காகச் சட்டி ஒன்றில் நீரை வார்த்தான், கறுவல்.

"எணையப்பு .. தண்ணியில்லாத... பஞ்ச காலத்திலை .." தனது செல்ல மகனைப் பாசமாகக் கேட்டாள் கற்பலங்காரி.

"இண்டைக்குக்... கறிக்குங் கூடக் கிடையாது..." தலையைச் சொறிந்தபடி கூறினான்.

"இண்டையப் பொழுது... நல்லாத்தான்... போகப் போது... நேத்துத்தான் எலுச பேதக்காட்டை நூறு ரூவா வாங்கினான், அந்தக் கடனும் குடுக்க வழியில்ல..."

கடலில் சென்று உழைப்பில்லாது கரை திரும்பிய சிறுவனின் முகம் காய்ந்துபோய் உவர்ப்புநீர் பொரிந்துபோய்க் கிடந்தது. பசி அவனது வாடிய முகத்திலை இழையோடியது.

"அப்பா இன்னமும்... வரேல்லையோ...?"

"வலை தப்பிக்கொண்டு... நிக்கிறார்..." பசியின் பிடியில் வார்த்தை தடுமாறியது.

"பிள்ளை... கேத்தல்லை தண்ணியிருக்கு தம்பிக்கு ஊத்துக் குடு, நான் கடல் பக்கம் .. போட்டு வாறன்.."

"காலமைப் பொழுது ஒரு மாதிரியா... போட்டுது... வலையும் பிடுங்கியாச்சு... இனித் தொழிலுக்குப் போகுமட்டும்....?"

தூரத்தில் நாயொன்று குரைத்தது. இவர்களது காணியைச் சுற்றி அடைக்கப்பட்டிருந்த வேலியும் காலத்தால் கனிவிழந்து அங்கொன்றும், இங்கொன்றுமாக அடையாளத்திற்குக் காட்சி தந்தது.

ஏலாமையின் நிலையிற்கூட தனது வீட்டின் தேவையைப் பற்றிச் சிந்திக்கும் ஏழை வீட்டுப் பணக்காரர்கள் இவர்கள், இயலுமானவரை முயற்சியுஞ் செய்வாள்... வாழ்க்கையில முழுப் பொழுதையும் தன் குடும்ப நலனுக்காகச் செலவிடுபவள். ஆனால் வாழத் தெரியாது மதுபோதையில் தடுமாறும் கணவனால் அரை ஆயுள் வரை குறைந்தவள்.

"இஞ்சேரும்... அப்பா இஞ்சேரும்..." தள்ளாடியது காலகள்.

"இம்... நல்ல வெறியிலை தான் வர்றார்... உந்த மனுசனுக்கு... கண்கடை தெரியாது... பிள்ளையள் உடுத்த உடுப்புக்கு அடுத்த உடுப்பில்லாம... திரியுதுகள், அவர் கண்மண் தெரியாமக் குடிச்சிட்டு வாறதை .." தினசரி திட்டுகின்ற வசனமல்லோ!

"இஞ்சேரும்... கறுவல் எங்க போட்டான்..."

"அவன்... அவன் பின்னாலை வலை பொத்தியண்டு இருந்தவன்..."

"அவன்தான் என்ரை புள்ளை... நான் செய்யுற வேலையை அவன் செய்யுறான்..."

கண்களை மறைக்கும் இருட்போதைக்குள் வார்த்தைகள் அளவின்றி அலைந்தன இருந்தும் கண்களைத் திரையிடும் சிறுதுளி கண்ணீரும் சேர்ந்துதான்.

'இந்த மனுசன்... எந்தவழியிலையும்... திருந்தாது... வீட்டிலும்... நிம்மதியில்லை... உந்தாளின்ரை குடிவெறியாலை தானே ...' ஆழமாகக் கவலை வெளித்தோன்ற அழுகை பிட்டுவிடும் போலிருந்தது.

சிறுவன், இருவரின் நிலை பற்றியும் சிந்தியாதவன் போல் வலையைப் பழுதுபார்த்துக் கொண்டிருந்தான். சதுரம் சதுரமாக இடையிடையே வலையின் பின்னலே தெரியாதவாறு கிழிந்து போயிருந்த அந்தப் பகுதியைப் பார்த்தவாறே முன்னைய வாழ்க்கைச் சித்திரத்தில் மூழ்கினான்.

வெப்பத்தின் புழுக்கமும், மனதின் வெதும்பலும் இவனுக்கு எரிச்சலை ஊட்டியது. மதுபோதையில் நிற்கும் தந்தையைப் பார்க்கும் போது, கிழிந்த கம்பாயத்துடன் தையல் போட்ட சட்டையுடன் வாழ்வில் நிம்மதி இழந்த தாயும்... இதுவரை காலமும் வெளிக்குத் திரை போட்டிருந்த உக்கல் வேலியும்... வெற்றுத் துவாரத்தால் குசினிக்குள் விழுகின்ற வெப்பக்கதிர்களும், நிலத்தின் பக்கவாட்டாகத் தெரியும் நிழற்படுக்கையையும் நினைக்கும் போது... ஆத்திரம் கண்ணை முட்டுகிறது. மறுகணமே இயக்கத்துக்குப் போன அண்ணனை நினைக்கும் போது அமைதியுறுகிறது.

இன்றையப் பொழுது இப்படியே விடிந்து விடும் என்பது அவர்களுக்குத் தெரிந்த வழமை. ஆனால் நாளைய பொழுதின் நெருடல்கள் இவளுக்கு நெஞ்சைக்கனமாக அழுத்தியது.

"தம்பி .. இண்டைப் பாட்டுக்கு... சிப்பி லி அண்ணையோடை .. தொழிலுக்குப் .. போட்டு வாவன் .. ஏதும் பட்டாக்கிட்டால் நாளையப் பொழுதைப் போக்கிடலாம் "

தாயின் அரவணைப்பாலேயே காலத்தைக் கழித்து வரும் சிறுவனுக்கு, மாலையின் கருக்கலும் கடலின் ஆழத்தில் மறையுஞ் சூரியனும்... நாளடைவில பழகிக் கொண்டு விட்டதொன்றே. அன்றும் சிரமத்தைப் பொருட்படுத்தாது சிப்பிலியருடன் தொழிலுக்குச் செல்கின்றான்.

விடிகின்ற காலையில் விளக்கங்கள் தெரியாது விளித்துக்கொள்கின்றார் அந்தோனிப்பிள்ளை. நேற்றைய தினம் என்ன நடந்ததென்பதே தெரியாதவர். மூன்று பெட்டிப் பாம்பாக அமைதியுற்று வலையைப் பழுது பார்க்கின்றார்...

வாசற் கதவின் நிலையிலிருந்து பல்லி யான்று கீச்சிடுவது தெரிந்தது.

"அப்பா... இப்பிடியேகுடிச்சிண்டிருந்தா... என்னபாடு .. ஒண்டில் நான் படிகணும்... இல்லாட்டித் தொழிலுக்குப் போகணும்... இரண்டுமில்லாட்டி உந்த நாசமறுவானைக் கலைக்கவாவது .. இயக்கத்துக்குப் போகவேணும் .."

கடந்தகால வாழ்க்கை அம்சங்களை நினைத்து நினைத்து வெளியில்சிந்தாத கண்ணீரால் மனதைக் கழுவிக்கொள்கின்றார். அவன் போனபிறகு சிறுவன் பள்ளி வயதிலேயே படகோட்டுவதற்குச் சித்தமாக, இந்தப் பவித் தந்தையுடன் பலிக்கடாவாக முறிந்து முறிந்துகொண்டிருக்கிறான். இதையும் அவர் நினைத்து மனம் வருந்துவதுண்டு...

ஒட்டுமொத்தமாகப் பெரும் பொதியை ஏற்றி அங்குமிங்குமாக; விளக்கின் அடியில் திரை போடும் நிழல்போல இவரது வாழ்க்கை... சலிப்போடு தன் வலையை மறுபக்கம் புரட்டிப் போடுகிறார். வாழ்க்கையும் ஒருவாறு புரண்டு கொண்டே போகின்றது...

"உந்த அநியாயப்படுவாராலை தொழிலுக்கும் போகேலாது...வாடை பேர்ந்தாலும் உள்ளாலையாவது தொழில் செய்யலாம் .. முதல்லை உவனைக் கலைக்கவேணும்... என்ரைபுள்ளையும் அவனைக் கலைக்கத்தானே இயக்கத்துக்குப் போனவன்...நான மட்டும்... தொழிலுக்குப் போகாமல்... பயந்துண்டு..." மனம் ஒரு முடிவுக்கு வந்தது.

சிறுவன் கையில் கிடைத்த பணத்துடன் வீடு வந்தான். அன்றைய தினம் ஒருவாறு அமைதியுற்றது. இன்று ஆழ் கடலில் அப்பாவுடன் மீன்பிடிக்கச் சிறுவனும் தயாரானான். தாய் கற்பலங்காரி பொதியில் சாப்பாடிட்டாள்.

## விடத்தல்தீவு மைக்கல்

அதிகாலை சேவலின் கூவலோடு விடிந்தது.

வீடு முழுக்க சந்தோசம் பிறந்தாற் போன்று எல்லோரும் மகிழ்ச்சியுடன் காணப்பட்டார்கள்.

"இன்றைக்கு நல்ல உழைப்புத்தான்... நாளைக்கும் சல்லிக்கு...... மேற்கால ..... போகவேணும்..." மனதில் எண்ணமிட்டார் அந்தோனிப்பிள்ளை.

"சே...இப்பையாவது வீட்டு வேலையைப் பாக்கலாம் ..... அப்பாவை நம்பி என்னதான் செய்யுறது..." எண்ணமிட்டவாறு கூடைக்குள் மீனள்ளிப் போட்டான் கறுவல். தாய் கற்பலங்காரியும் சந்தோசத்துடன் வந்து நின்றாள். சிறியவன் ஓடிவந்து...

"அம்மா... அம்மா...... நம்மட அண்ணா லீவில வந்திட்டுது..."

சிறுவன் மீனையும் விட்டுவிட்டு வீடுசென்றான். தந்தை தொழில் அலுவல்களை முடித்துக் கொண்டு அவசரமாக வீடு திரும்பினார்.

அன்று முழுக்க மூத்த மகனின் சந்தோசத்தில் நிம்மதியடைந்திருந்தார். இருந்தும் கடலில் வரிசையாகக் கட்டப்பட்டிருக்கும் எதிரியின் படகுகள் சிதையும் வரை இவரது மனம் நிம்மதியடையவில்லை. சற்றே நாளில் மகன் போனதையடுத்து மனதில் சிறிதான நெருடல். அதையும் தாங்கப் பழககப்பட்டவர். ஆனால்மறப்பதற்கு மதுதான் அவருக்கு மருந்தாகப்பட்டது. அன்று அவருக்குமனதில் நிம்மதி இல்லாத நாளாதலால் எப்படியாவதுதொழிலுக்குபோகவேணுமென்றே பட்டது.

சிறுவன் மனதில் அப்பாவின் நிலை சற்று இடரை ஏற்படுத்தியது. இன்றைக்கு எப்படியாவது தொழிலுக்குப் போவதை நிறுத்த வேண்டுமென முடிவு செய்தான்.

ஒருவாறு மறையுங் கதிருக்குள் அன்றைய பொழுதைக் கழித்தான். ஆனால் அவனது தந்தையின் பிடிவாதத்தைத் தணிக்கப் பெருமுயற்சி செய்தான்.

"இண்டைக்கு அவங்களுக்குக் கிட்டப் போய் வலைபடுத்திட்டு வாறதுதான் .."

போராளிகள் இருவர் வந்தனர்.

"என்ன தம்பிமார்..."

"எங்களையொருக்கா இரணைதீவில விடவேணும்..."

"நான் வாறன்" என்ற கறுவலை, அந்தோனிப்பிள்ளையர் மறித்தார்.

"நான் கொண்டு போய் விடுறன், தம்பிமார்."

வாடைக்காற்றுப் பெயரத் தொடங்கியது. வானின் முகிற் கூட்டமெல்லாம் வடதிசையை நோக்கி நகரத் தொடங்கின. முகில்களின் இடையே வட்டமிட்டு மறையும் நிலவின் நடுச்சாமத்தில் படகு இரணைதீவு வரைசென்றது.

கடலும் கொந்தளிப்பால் ஆர்ப்பரித்தது. கரை தெரியும் தென்னை மரக்கீற்றிலை உயரப்பறக்கும் பறவைகள். கரும்பொட்டாகியது மரங்கள் முறிந்துவிடும்போல் அசைந்தது. வடதிசையை மண்டியவாறு முகிற்கூட்டங்கள் நிறைந்திருந்தன. நிலவின் ஒளியும் இருளாக...சிறிதாக மழைத்தூறல் கொட்டத்தொடங்கியது பூமியின் வெளிச்சத்தை மூடிக் கொண்டது மழைமுகிற் கூட்டங்கள்.

படகு சந்தோசத்துடன் கடலலையில் தாளமிட்டபடி சென்றது. கடலும் அன்று சிரித்தவண்ணமே கிடந்தது.

தாய் கற்பலங்காரி அடிக்கடி மரியன்னையை வேண்டத் தவறுவதில்லை.

'மனிசனால ஒரு சதத்திற்குப் பிரயோசனமில்லை' என மனம் எண்ணமிட்டது. 'குடிக்கிறதைத்தவிர வேறுவேலை... ஏதோ பிள்ளையள், ஒன்று நாட்டுக்கு ஒன்று வீட்டுக்கென்று.'

மூத்தவனை நினைக்கப் பெருமிதமும், கறுவலை நினைக்க பாசமும் நெஞ்சில் சுரந்தன.

படகில் ஏறிவந்தபோராளிகளைக் குறிப்பிட்ட தீவில் இறக்கிவிட்டு, ஆயுதம் எதுவுமில்லாமல் ஆழமாகக் கொண்டிருந்த மனவுறுதியுடன் படகைச் செலுத்தினார்.

வானின் வடதிசையில்கூழைக்கடாய் ஒன்று கத்துவது தெரிந்தது. கடல் அலைகள் படகின் மீது நீரை வாரிப்போட்டது. படகு கவிழ்ந்துவிடும்போல் தோன்றியது.

தூரத்தில் மின்மினிப் பூச்சியின் வெளிச்சம்போல் தோன்றிப் பின்னர் கண்கொடுத்துப் பார்க்க இயலாத போக்கஸ் வெளிச்சத்தில். இவரது படகு தெட்டத் தெளிவாகியது. படகை நெருக்கிக் கொண்டு நேவிப் படகுகள் மாறி மாறி எறிகணைகளைத் தொடுத்தன. படகு அங்குமிங்குமாக அல்லற்பட்டது. தன்னைத் தேடி எதிரிப் படகுகள் விரைவது தெரிந்ததும் திடமான முடிவுடன் கடலில் குதித்தார் அந்தோனிப்பிள்ளையர். வாடைக் காற்றோடு, கொந்தளிப்பும், குவியலாகப் படகினருகில் விழுந்து வெடிக்கும் ஷெல்லும் அந்தப் படகைச் சிதைத்திருக்க வேண்டும்.

கடலின் எட்டுத்திசையாவும் எதிரொலித்த வேட்டுச் சத்தங்கள் அந்தத் தீவுவரை கேட்டிருக்கும்... அங்கும் சில ஜீவன்கள் இவருக்காக...

நேற்று மாலை மகிழ்வுடன் படகெடுத்து போராளிகளை இறக்க வந்தவர் இன்று ..... வரை திரும்பவில்லையே. நாலு கோசயில் அழுத கண்களும ஆறி வற்றி அடங்கிக் கொண்டதே.

ஆனால் தந்தை தொழிலை சிறுவன் விட்டிட முடியுமா?... காலப்போக்கில் இவனும்......

"அம்மா... சோத்தைப் போட்டுக் கட்டணை, போன வாடை திரும்பவா போகுது... நேரத்தோடை தொழிலுக்குப் போகணும்..."

"கவனமய்யா... இல்லை... இனிப்போன வாடை திரும்பாதுதான் .. நல்லபடியாப்... போட்டு வா......"

## மணலாற்று மண்ணில் புறம்பாரும் வீரர்!

வீட்டின் தலைவனே நாட்டையும் காத்திட
வீறுகொண் டெழுந்திடும் மணலாறு கண்டேன்
பூட்டிய விலங்கினை உடைத்திடப் புறப்படும்
புறநானூற்றுப் பெரும்படை கண்டேன்!

ஐம்பது வயதிலே அறுவடை முடிந்ததும்
தெம்புடன் எல்லைக்குச் செல்லுவோர் கண்டேன்!
"தும்பி"யைக் கண்டதும் துரத்தியே விரட்டிடும்
தம்பிகளோடு தாத்தாக்கள் கண்டேன்!

போரொலி கேட்டதும் புலியென எழுந்து
பேரெழில் மனைவியைத் தழுவியே விடைபெற்று
தோளிலே துப்பாக்கி ஏந்தியே சென்றிடும்
துணைப்படை வீரர் ஆயிரம் கண்டேன்!

வஞ்சகர் வந்து அழித்திடும் வேளை
அஞ்சுதல் ஏற்ற செயலல்ல என்பதை
நெஞ்சிலே தாங்கும் வன்னியின் மண்ணிலே
நம்முயர் வீரம் செழிப்பதைக் கண்டேன்!

வாய்க்காற் கரையிலே உரமுடன் வளர்கின்ற
வலிமையை இழக்கா நாணல்போல்... நம்மவர்
தாய்த்தமிழ் அன்னையின் விலங்கினை ஒடித்திட
தனிப்படை ஒன்றின்கீழ் நடப்பதைக் கண்டேன்!

மண்கிண்டி மலையிலே மாற்றானின் தலைகளை
மின்னலடி கொடுத்து வீழ்த்திய மறவரின்
பொன்னடி பட்ட பூமியில் சிலநாள்
என்னடி பதித்து இனிமையாய் நடந்தேன்!

-கவிஞர் .மு.வே.யோ. வாஞ்சிநாதன்

# வட தமிழீழத்தில் அரைதசாப்தத்தின் பின் மீண்டும் கொலரா நோய் அச்சுறுத்தல்

இம் மாதம் 6-ம் திகதி திங்கட்கிழமை மாலை4 மணி: இருபாலையை அண்டிய ஒரு கிராமத்தின் சிறு வெளியில் விளையாடிய பள்ளிச் சிறுவர்களில் ஒருவன் ''ஆட்டம்'' சொல்லிவிட்டு இயற்கை அழைப்பினால் வீடு நோக்கி ஓடுகிறான். மக்களைப் பரபரப்படையச் செய்வதும், சுகாதார சேவையினரை எச்சரிக்கை நிலைக்குத் தள்ளக் கூடியதுமான ஒரு ஆபத்தான நோயின் தாக்கத்திற்கு தான் உள்ளாகி இருப்பதை ''பரணிதரன்'' என்ற அந்த 9வயதுச் சிறுவன் அப்போது அறிந்திருக்கவில்லை.

## 1. மிதமான நீரிழப்பின்

| வயது | ஜீவனி முதல் 4 மணித்தியாலத்தில் |
|---|---|
| 1 - 4 மாதம் | 200 - 400 மி.லீ. |
| 4 - 11 மாதம் | 400 - 600 மி.லீ. |
| 12 - 23 மாதம் | 600 - 800 மி.லீ. |
| 2 - 4 வயது | 800 - 1200 மி.லீ. |
| 5 - 14 வயது | 1200 - 2000 மி.லீ. |
| 15 வயது | 2200 - 4000 மி.லீ. |

மாலை 6 மணி : ஏற்கனவே நான்கு முறை வயிற்றுப் போக்கிற்கும், இருதடவை வாந்திக்கும் ஆளாகிவிட்டான். நாவரண்டு உடல் சோர்ந்து போயிருந்தான். தாயார் அருகில் உள்ள தாதி ஒருவரின் ஆலோசனைப்படி ஜீவனியை கொதித்தாறிய நீரில் கரைத்துப் பருக்கிய வண்ணமிருந்தார். வயிற்றுப் போக்கு தொடர்ந்தது. சிறுவனின் நிலையும் மோசமடைந்தது. வேலையால் திரும்பிய தந்தை சிறுவனை வைத்தியசாலையில் அனுமதிக்கத் தீர்மானித்தார்.

இரவு 8 மணி: சிறுவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டான். இதனிடையே எட்டுமுறை வயிற்றுப் போக்கு ஏற்பட்டுவிட்டது. ஒவ்வொரு தடவையிலும் குறைந்தது ஒரு சில்வர் வரையான சோற்றுக்கஞ்சி போன்ற மலம் போயிருந்தது. மூன்று தடவை வாந்தியெடுத்திருக்கின்றான். நோய் தோன்றியதிலிருந்து சிறுநீர் கழிக்கவில்லை. சிறுவன் அரை மயக்க நிலையில் விரைவான மூச்சுடனும் குழி விழுந்த கண்களுடனும் அசையாது படுத்திருந்தான் கை, கால்கள் குளிர்ந்து நாகாய்ந்து, இள்ளிய தோல் அப்படியே இருந்தது. நாடித்துடிப்பு மிகவும் விரைவாகவும், உணர்ந்து கொள்ள கடினமாகவும், குருதியமுக்கம் பாதியாகவும் போயிருந்தது. வைத்தியர்கள் சோதித்துக்கொண்டிருந்த போதே மீண்டும் ஒருமுறை சோற்றுக்கஞ்சி போன்றமலம் போனது வைத்தியர்கள் ஒருவரை ஒருவர் அர்த்தத்துடன் பார்த்துக் கொள்கிறார்கள்.

குடாநாட்டில் அரை தசாப்தத்தின் பின் முதலாவது கொலரா நோயாளி நோய் நிர்ணயம் செய்யப்பட்டு தனிமைப்படுத்தப்படுகிறான்.

### நோய் பரம்பல்:

பிளேக் போன்று அச்சப்பட்ட இக் கொலரா நோய் ஒரு காலத்தில் பாதிக்கப்பட்டவர்களில் பாதிக்கு மேற்பட்டவர்களை மரணத்திற்குள்ளாக்கியது. மிக இலகுவாகவும் விரைவாகவும் பரவும் இந்நோய் சென்ற நூற்றாண்டு வரையில் ஆறு உலகளாவிய தாக்கங்களை ஏற்படுத்தி பல உயிர்களைக் காவு கொண்டு அச்சுறுத்தியுள்ளது. ஏழாவது இத்தகைய தாக்கம் 1961-ம் ஆண்டு இந்தோனேசியாவில் ஆரம்பித்து காலத்திற்குக் காலம் பரவி நன்கு காலூன்றி தற்போது உலகின் மறுகோடியிலுள்ள லத்தீன் அமெரிக்க நாடுகளையும் தென் ஆபிரிக்க நாடுகளையும் தாக்கிக்கொண்டிருக்கிறது. எனினும் இதன் தாய் வீடு போன்ற பங்களாதேஷ், மேற்கு வங்காளம், கல்கத்தா ஆகிய பகுதிகள் அவ்வப்போது தாக்கத்திற்குள்ளாகின்றன.

### டாக்டர் அருள்

### நோய்க்காரணி:

இந்நோய் ''விப்ரியோ கொலரா'' (Vibrio Cholerae) என்ற கோலுருக் கொண்ட கால்குறி அமைப்புடைய அசையக்கூடிய பக்ரீறியாவினால் (Bacteria) ஏற்படுத்தப்படுகின்றது. நன்னீரை விட கடல்நீரிலேயே அதிகம்வாழும் இக்கிருமி இயற்கையில் குறிப்பாக மனிதனையே தாக்குகின்றது. இக்கிருமிகள் புதிய பிரதேசத்திற்கு வேறு இடங்களில் இருந்து வரும் கிருமி தொற்றிய சுகதேகிகள் மூலம் கொண்டு செல்லப்படுகின்றது. குடிசன நெருக்கம் கூடிய சுகாதார வசதிகள் குறைந்த பகுதிகள்-உதாரணமாக இடம் பெயர்ந்தோர் அகதி முகாம்கள், சேரிக்குடியிருப்புக்கள் ஆகியன இலகுவில் இதன் தாக்கத்திற்கு உட்படுகின்றன.

### பரவும்முறை:

இக் கிருமிகள், நோயால் பீடிக்கப்பட்டவர்கள, கிருமியைக்காவும் சுகதேகிகள் மலத்தில் வெளியேறுகிறது. சுகாதார முறைப்படி மலங்கழிக்காதவிடத்து இவை குடிநீரின் நிலைகளையும், மரக்கறி வகைகளையும் மாசுபடுத்துகிறது. இவ்வாறு மாசுபடுத்தப்பட்ட குடிநீர், மரக்கறி, ம-டி முதலியவற்றை உட்கொள்ளுவதால் நோய்க் கிருமிகள் ஒருவருக்குத் தொற்றுகின்றன.

### நோய்த்தோற்றம்:

இவ்வாறு உள்ளெடுக்கப்பட்ட கிருமியில் ஒருபகுதி இரைப்பையில் அமிலத்தால் அழிக்கப்படுகிறது. மிகுதி சிறுகுடலில் கார ஊடகத்தில் பல்கிப் பெருகி என்ரறோரொக்சின் (Enterotoxin) என்ற ஒருவகை நச்சுப்பதார்த்தை சுரக்கிறது. இவற்றிற்கும் உடலின் நோய் எதிர்ப்பு சக்திக்கும் ஏற்படும் மோதலில், உடல் வெற்றியடைந்தால் கிருமியை உட்கொண்டவர் சுகதேசியாகவே இருப்பார். எனினும் அவரின் மலத்தில் இக்கிருமி வெளியேறும். இவ் எதிர்ப்புச் சக்தியின் அளவு தனிநபர்களுக்கிடையே வேறுபடுவதனால் தான் ஒரே குடும்பத்தில் உள்ளவர்களில் அல்லது ஒரே சூழலில் வசிப்பவர்களில் சிலர் நோயின் தாக்கத்திற்கு ஆளாக, ஏனையோர் அதிலிருந்து தப்புகின்றார்கள்.

மோதலில்நோய்க்கிருமியும், ரொக்சினும் வெற்றிபெற்றால் நோய் தோன்றுகிறது. என்ரறோ ரொக்சின் சிறுகுடல் சீதச்சவ்வின் மேலணிக் கலங்களுடன் பிரிக்க முடியாதவாறு இணைந்து கொண்டு அவற்றில் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. இதனால் அவை நீரையும் கனியுப்புக்களையும் அளவுக்கதிகமாக அதாவது பெருங்குடலினால் மீள உறிஞ்சப்படக்கூடிய அளவிலும் பல மடங்கு அதிகமாக சுரக்கின்றன. இதனால் உடலில் நீரிழப்பும் கனியுப்பு இழப்பும் ஏற்படுகின்றது.

### குணம் குறிகள:

மேற்கூறியவை நோய்க்கிருமிகள் உட்சென்றதிலிருந்து 12முதல் 72 மணித்தியாலத்தில் நிகழ்ந்து நோய் தோன்றுகிறது இதன் குணம் குறிகள் சடுதியான வயிற்றுப் போக்கும், வாந்தியுமாகும். எனவேதான் இது வாந்திபேதி என அழைக்கப்படுகின்றது.

மற்றைய வயிற்றுப் போக்குகள் போலல்லாது இங்கு ஒரு சில மணித்தியாலங்களிலேயே தீவிர நீரிழப்பு ஏற்பட்டு மோசமான நிலை ஏற்படுகிறது. மலம் பொதுவாக சோற்றுக் கஞ்சியை ஒத்ததாகக் காணபபடும். நீரிழப்பினால் மேற்கூறிய சிறுவனுக்கு ஏற்பட்டதை ஒத்த குணம் குறிகள் தோன்றும்.

### ஆய்வுகூட சோதனை:-

இத்தகைய குணங்குறிகளைக் கொண்டு சிகிச்சைக்கான நோய் நிர்ணயம் செய்ய முடிகின்ற போதிலும் உறுதிப்படுத்துவதற்கு ஆய்வுகூட சோதனைகளே தேவைப்படுகிறது மலத்தின் ஒருபகுதி சேகரிக்கப்பட்டு ஆய்வுகூடத்தில கிருமி வளர்ப்பு ஊடகத்தில் இடப்படுகிறது மறுநாள் ஊடகத்திலுள்ள கிருமிகளின் கொலனியில (ஒரு கிருமி பல்கி பெருகியதால் தோன்றியது) தன்மையைக்கொண்டு நோய் நிர்ணயம் உறுதிப்படுத்தப்படுகிறது. இவ்வசதி தற்போது அரிதாகவே இங்கு காணப்படுகிறது.

### சிகிச்சையும் நோய்த்தடுப்பும்:

தற்போது உலகளாவிய தாக்கத்திற்குக்காரணமாகஎல்ரோ (Eltor) வகை கொலரா கிருமி அதிகதொற்றும் தன்மையும் குறைந்த வீரியத்தையும் உடையது. தற்போது பங்களாதேஷ், கல்கத்தா, சென்னை, மதுரை ஆகிய பகுதிகளில் கொலரா 0139 என்ற வகைக் கிருமியே தாக்கத்தை ஏற்படுத்துகிறது இது ஏனைய கொலரா வகைகளை ஒத்த இயல்புகளைக் கொண்டிருக்கின்றது. இதன் தாக்கத்திற்கு உள்ளாகியவர்களின் 50 பேருக்கு ஒருவரே நோய்க்கு உள்ளாகிறார்கள் இவர்களில் 90 வீதமானோர் மிதமான நீரிழப்பிற்கே உள்ளாகிறார்கள். இவர்களிற்கு அட்டவணையில் கூறியவாறு ORS அல்லது ஜீவனியை வழங்கலாம். இச் சிகிச்சையின் பின்னரும் நோயின் கடுமையான தாக்கத்திற்கு உள்ளானவர்கள் மேற்குறித்த சிறுவனைப் போல மோசமான நிலையை அடைகிறார்கள். இவ்வாறு தீவிர நீரிழப்பிற்கு உள்ளானவரும் தொடர்ச்சியான வாந்திக்கு உள்ளானவர்களும் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு நாளத்திரவங்கள் ஏற்றப்பட்டு உரிய உயிர் எதிரிகளும் (Antibiotics) வழங்கப்பட வேண்டும். இத்தகைய சிகிச்சை நிலைமைகளில் நோயினால் ஏற்படும் இறப்பு வீதம்தற்போது 1வீதத்திலும் குறைந்துள்ளது.

### நோய் எதிர்ப்பு சக்தி:

இந்நோயைக் கட்டுப்படுத்துவதற்காக தடை ஊசி உருவாக்கப்பட்டு இருப்பினும் இவற்றினால் ஏற்படும் நிர்ப்பீடனம் குறுகிய காலத்திற்கு குறைந்த வீதத்தினரையே பாதுகாக்கும் என்பதனால் உபயோகமற்றதாகவே உள்ளது.

தமிழீழத்திற் பலபகுதிகளில் மக்கள் இடம்பெயர்ந்து நெருக்கமாக வாழ்வதினால் இந்நோய் இலகுவாகவும் விரைவாகவும் பரவக்கூடிய நிலை உள்ளது. எனவே இடம் பெயர்ந்தோர் முகாம்கள் குடியிருப்புப் பகுதிகளில் சுகாதாரத்திற்குக் குறிப்பாக குடிநீர் கழிவகற்றல் ஆகியவற்றிற்கு அதிக கவனம் செலுத்துவதால் பேரழிவை ஏற்படுத்தக் கூடிய இந்நோயிலிருந்து மக்களைக் காக்க முடியும். பூர்வாங்க ஆய்வுகள் இந்தியாவிலிருந்து நாடு திரும்பியோரே இந்நோயை இங்கு கொண்டு வந்திருக்கலாம் என தெரிவிக்கின்றன. வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மூன்று தினங்களின் பின் 'பரணிதரன்' பூரண குணமடைந்து வீடு திரும்பிவிட்டான். ஆனால் மேலும் ஐந்து பேர் இந்நோயுடன் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள் இருவர் இறந்துள்ளார்கள் என்ற செய்தியும் கிளிநொச்சியில் வாந்திபேதி தாக்கம் என்ற செய்தியும் உற்சாகமளிப்பவையாக இல்லை. எதுவரினும் நாம் ஒன்றிணைந்து முயற்சித்தால் இவ் உயிர் கொல்லி நோயிலிருந்து எம்மை பாதுகாத்துக் கொள்ள முடியும்.

## 2. கொலராவிலிருந்து உங்களை பாதுகாக்க

அ. பாதுகாப்பான உணவு

1. உணவு தயாரிக்க, அருந்த முன்பும், மலகூடம் சென்ற பின்பும் கைகளை சவர்க்காரமிட்டு நன்றாக கழுவவும்.
2. உணவை நன்குசமைக்கவும், உடன் சமைத்தஉணவை உட்கொள்ளுங்கள் அல்லது உட்கொள்ளுமுன் மீள சூடேற்றுங்கள்.
3. அடுப்பில் ஏற்றாத மரக்கறிகளையும் தோலுரிக்காத பழங்களையும் உண்ணாதீர்கள்.

ஆ. பாதுகாப்பான குடிநீர்

1. உங்கள் கிணறுகளிற்கு அல்லது நீர்த்தாங்கிகளிற்கு குளோரினிடுங்கள்.
2. நீரை சூடாக்கி ஒரு நிமிடத்திற்கு நன்கு கொதிக்க வைத்து ஆறவிடுங்கள்.
3. மூடிய பாத்திரத்தில் சேமித்து வையுங்கள்.

இ. கழிவகற்றல்

1. நீரடைப்பு மலகூடங்களை பாவியுங்கள் அல்லது
2. மலத்தை குழியிலிட்டு மூடவும்.

ஈ. திருவிழா முதலிய அதிக மக்கள் கூடுமிடங்களை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

உ. உங்கள் பகுதியில் வயிற்றோட்டநோய் தோன்றினால் உடன் வைத்திய ஆலோசனையை நாடவும்.


மலிவு விற்பனை
பல பொருட்கள் மலிவு விலையில்
ரூபா 500ற்கு மேற்பட்ட கொள்வனவிற்கு
மாதாந்தப் பரிசுத் திட்டம்
உங்கள் பொருட்கள் விற்றுக் கொடுக்கப்படும்.
எழிலகம், மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (சி-7479)

## மூக்குக் கண்ணாடியில் டி.வி.

ஜப்பானிய நிறுவனம் ஒன்று புதுமையான டி.வி ஒன்றை உருவாக்கியுள்ளது. மூக்குக் கண்ணாடியில் அதனைப் பொருத்திக் கொள்ளலாம் அததனை சிறியது

இந்த டி.வி 250 கிராம். எடைதான் இருக்கிறது. டி வி யைச் சுற்றி வளையம் உள்ளது. அபபடியே தலையில் மாட்டிக் கொள்ளலாம டி.வியும்பார்க்கலாம் போர் அடித்தால கண்ணாடி மூலம வெளி உலகத்தையும் பார்த்துக் கொள்ளலாம்.

டி. வியில் 1.8செ. மீ அளவுள்ள சின்னஞ்சிறிய திரையில் பெரிய திரையில் காணப்படுவது போலவே தெளிவாக காட்சி தெரிகிறது. காதுகளில் பொருத்திக் கொள்ளும் EAR PHONE -ல் இனிமையான ஓசையை கேட்டு மகிழலாம் இந்த டி வியில் முப்பரிமாண படங்கலைக் கூட பார்க்க முடியும்.




# கல்விப்பொதுத்தராதர (சாதாரண) பரீட்சை; கணித பாட உதவிக் குறிப்புக்கள்

வினாத்தாளை இரு தடவைகள்முழுமையாக நனகு வாசித்து நகு தெரிந்த வினாக்களுக்கு நன்கு தெரிந்த ஒழுங்குக்கமைய வினாத் தாளில் கொடுக்கப்பட்ட இலக்கங்களையிட்டு விடையளிக்க வேண்டும் நேரத்தைக் கணக்கிட்டு ஒவ்வொரு வினாவிற்கும் உரிய நேரததிற்குள் விடையளிக்க முயற்சிக்க வேண்டும். இலக்கங்கள், எழுத்துக்கள், படங்கள் என்பனவற்றைத் தெளிவாகவும் துப்புரவாகவும் அமைக்க வேண்டும்.

எழுதியபின்நீக்கப்படவேண்டிய பகுதிகளிருப்பின் ஒருநேர்கோடு மட்டும் குறுக்கே வரைந்து நீக்க முடியும் ஒவ்வொரு விடைக்குமுரிய செய்கைகளை அவ்விடைகளுக்கருகே சுருக்கமாக தெளிவாகக் காட்ட வேண்டும். மனக்கணக்காக செய்யமுடியாத கணிப்புகள் யாவற்றுக்கும் செய்கை வழி காட்டல் அவசியம் இயன்றளவு சுருக்க முறைகளைக் கையாண்டு நேரததைச் சுருக்கிக் கொள்ள வேண்டும். விடைகளை வாய்ப்பு (சரி-பிழை) பார்ப்பதன் மூலம் பெரும்பாலான வழுக்களைத் தவிர்த்துக் கொள்ள முடியும். உதாரணமாக, ஒரு துவிச்சக்கர வண்டி ஓட்டுநர் வேகம் மணிக்கு75கிலோ மீற்றர் என்பதுஒருபொருத்தமற்றவிடை.

### காரணிகள்

தரப்பட்ட கோவையினைக் காரணிகளாக்கிய பின்,பெற்ற காரணிகளைப் பெருக்கி கோவையினை வாய்ப்புப்பார்க்க வேண்டும். அடையாளங்களிலேனும், உறுப்புகளிலேனும் வேறுபாடிருபபின் செய்கையினை மீளப்பார்த்து திருத்தம் செய்துகொள்ளவேண்டும்.

### சமன்பாடுகள்

ஒருங்கமைசமன்பாடுகளைத் தீர்க்கும் பொழுது பெற்ற விடையினை தரபபட்ட இரு சமன்பாடுகளிலும் பிரதியிட்டு இடது பக்கத் தொகையும் வலது பக்கத் தொகையும் சமனாகவுள்ளனவா என வாய்ப்புப்பார்க்க வேண்டும். இதே போன்றே எளிய சமன்பாட்டுத் தீர்வையும் வாய்ப்புப் பார்க்க வேண்டும். இருபடிச் சமன்பாடுகளின் தீர்வினைக் காண்பதற்கு வாய்பாடுகளை பயன்படுத்தாது விடுவிக்கும் முறையினையும் [பூரணவர்க்கமாக்கி] வாய்பாடுகளைப் பயன்படுத்தி விடுவிக்கும் முறையினையும் நன்கு அறிந்திருக்க வேண்டும்.

### அடுக்குகள்

### அலலது வலுக்கள்

அடுக்குகளுக்குரிய பிரதான விதிகளை நன்கு அறிந்து வைத்திருத்தல் வேண்டும். வலுக்களைக் கொண்ட பின்னங்களை எளிய வடிவி சுருக்குவதில் நனகு பயிற்சி பெற வேண்டும்.

### மடக்கை

தரப்பட்ட கோவைகளை மடக்கை வாய்பாடுகளைப் பயன்படுத்தி பெற்ற விடையினை அகவோவையின் அண்ணளவு பெறுமதியினை அறிந்து வாய்ப்புபபார்க்க வேண்டும். இவ்விரு விடைகளுக்கிடையில பாரிய வேறுபாடிருப்பின் மடக்கைப் பெறுமதிகளை மீளப்பார்த்து வழுக்களைத் திருதத முடியும்.

### விருத்திகள்

கூட்டல் விருத்தி, பெருக்கல் விருத்தி என்பவற்றுக்கான வாய்பாடுகளையும் அவற்றினை வருவிக்கும் முறையினையும் நன்கு அறிந்திருக்க வேண்டும். பிரச்சினைகளுக்குப் பொருத்தமான சமனபாடுகளை அமைத்து தெரியாக் கணியங்களைக் கணிக்கவேண்டும். சமன்பாடுகளை இலகுவாகவும் விரைவாகவும் விடுவிக்கக் கூடிய முறைகளை அறிந்திருக்க வேண்டும். இயன்றளவு விடைகளை சரிபிழை பார்க்க வேண்டும்.

### தொடைகள்

வென்வரிப்படங்களை அமைக்கும் பொழுது அகிலத் தொடைக்கான வரிப்படம் (செவ்வக வடிவானது) வரையப்படல் அவசியம் பிரதேசங்களை குறிக்க நிறந் தீட்டும் பொழுதும் தரவுகளை (எண் பெறுமானங்கள்) குறிக்கும் பொழுதும பொருத்தமான இடங்களில் கவனமாகக் குறித்தல் வேண்டும். பெறுமானங்களைக் குறிப்பதற்கு அடிக்கடி வெட்டித் திருத்தாது பென்சிலால் எழுதி இறுதியாகப் பேனையினைப் பயன்படுத்துதல் நன்று. பெற்ற விடைகளை தரபபட்ட தரவுகளுடன் வாய்பபுப் பார்த்தல் அவசியம்.

### வரைபுகள்

வரைபுபபுள்ளிகளுக்குரிய ஆள்கூறுகளினை சரியான முறையில் அட்டவணை தயாரித்து கணிக்க வேண்டும் பெரும்பாலான வரைபு வினாக்களின் கோவை(Y) இற்கான பெறுமானங்களில் ஒரு சமச்சீர்த்தன்மையினைக் காணக் கூடியதாக இருக்கும். இதனால் கணிப்புகளை இலகுவாக வாய்ப்புப் பார்க்க முடியும். X அச்சினையும் Y அச்சினையும் வினாவில் தரப்பட்ட அளவிடைக் கேற்ப அமைத்தல் முக்கியம். புள்ளிகளை வரைபுதாளில் குறித்து அவை நனகு விளங்கும பொருட்டு அபபுள்ளிகளைச்சுற்றிசிறு வட்டங்கள் அமைத்தல் நன்று புள்ளிகளை இணைக்கும் பொழுது வளைகோடு வடிவில் (நேர்கோடாக இணைக்கக் கூடாது) இணைக்க வேண்டும் சார்பின் உயர்வு அல்லது இழிவுப் பெறுமானத்தை காணபதற்கு உதவியாகவும் சிறந்ததோர் வரைபினைப் பெறுவதற்கு உகந்ததாகவும் இருககுமாறும் வளையி திரும்பும், எனக்காணும் இடத்திற்கு அருகருகே மேலதிக புள்ளிகளைப்பெறல்நன்று அச்சுக்கள், வளையி. கோடுகள் யாவும்துப்புரவாகவும் தெளிவாகவும்இருக்க வேண்டும்.

> அண்மைக் காலத்தில் க.பொ.த. (சாதாரண) தரப் பரீட்சையில் கணித பாடத்தின் பெறுபேறுகள் அவ்வளவு சிறப்பாக அமையவில்லை என்பது பலராலும் உணரப்பட்டுள்ளது. இந்த வகையில். கணித பாடத்தில் மாணவர்களுக்கு உதவும் மூகமாக இக் கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.

### அமைப்புகள்

அமைப்புகளை வரைவதற்கு முன்வரையப்பட வேண்டிய உருவத்திற்கு ஒத்த பருமட்டான உருவம் ஒன்றை வரைதல் வேண்டும். அப்பருமட்டான உருவில் தரப்பட்ட தரவுகளைக் குறித்தல் வேண்டும். எவ்வெழுங்கில் உருவினை அமைக்கவேண்டுமென்பதனைத் தீர்மானித்துக்கொண்டு அவ்வொழுங்குக்கமைய உருவத்தினை அமைத்தல்வேண்டும். அமைப்புக்கோடுகள், விற்கள் எவற்றையும்அழித்தல்கூடாது அளந்து குறிககவேண்டிய நீளங்களை கிட்டிய முதலாம் தசமதானத்திற்கும் கோணங்களை கிட்டிய முழுப்பாகையிலும் குறிக்கவேண்டும்.வட்டம் அமைக்கும் பொழுது வட்ட மையத்தினைப பெற்றமுறை தெளிவாகக் காட்டபபடல் வேண்டும. கோடுகள், விற்கள் யாவும் பென்சிலால் வரையப் படுவதுடன் அமைப்புகள் துப்புரவாகவும், தெளிவாகவும் அமைதல் அவசியம்.

### தேற்றங்களும் பயிற்சிகளும்

தேற்றம் நிறுவும் பொழுது சரியாகப் பெயரிடப்பட்ட உருவம், தரவு நிறுவவேண்டியது (மேற்கோள்) அமைப்பு (அவசியமெனில்) நிறுவல் என்பன ஒழுங்கு முறைப்படி எழுதல் வேண்டும. நிறுவல்களுக்கான காரணங்கள் கூற்றுக்களுக்கு அருகே சுருக்கமாகத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். இயன்றளவு கேத்திர கணித குறியீடுகளைப் பயன்படுதி நீண்டவசன தொடர்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.

### புள்ளிவிபரவியல்

வகுப்பாயிடை, மீடிறன், விலகல் போன்ற தரவுகளை நிலைக்குத்தாக எழுதுதல் நன்று. பொருத்தமான உத்தேசித்த இடையினை தரவுகளின் நடுப்பகுதியில் அல்லது ஆகாரத்தைக் கொண்ட வகுப்பாயிடையில் தெரிதல் நன்று. விலகல் பெறுமதிகள் அடையாளங்களுடன் [திசைகொண்ட எண்களுடன்] குறிப்பிடப்படின் மொத்த விலகல், சராசரி விலகல் என்பன கணிக்கப்படும் பொழுது ஏற்படும் வழுக்களை நீக்கலாம். இடை, இடையம் ஆகாரம் என்பன குறிக்கும் கருத்தினை மாணவர்கள் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும்.

### நிகழ்தகவு

மரவரிப்படம்வரைந்து நிகழ்தகவு வினாக்களுக்கு விடை காணும்போது கிளைகளில் நிகழ்தகவுக்குரிய பின்னப் பெறுமதிகளை தெளிவாகக் குறிககவேண்டும். இறுதி நிகழ்தகவுகளைப் பெற்ற வழியினை [பின்னங்களைக் கூட்டுவதால், பெருக்குவதால்] தெளிவாகக்காட்டவேண்டும். தெக்காட்டுத்தளத்தில் குறிப்பிடின் அச்சுக்கள் உரிய முறையில் பெயரிடப்பட்டு புள்ளிகள் காட்டப்பட வேண்டும். சிக்கலான பிரச்சினைகளுக்கு மாதிரி வெளியை வரிசைப் பட்டசோடிகளாகஎழுதிப்பின் தெக்காட்டுத் தளததில் குறிக்க முடியும்.

### திரிகோண கணிதம்

தரபட்ட வினாவிற்கு வினாத்தாளில் பருமட்டான வரிப்படம் கொடுக்கப்படாதவிடத்து பொருத்தமான பருமட்டான வரிப்படம் வரைதல் அவசியம். வினாத்தாளில் பருமட்டான படம் கொடுக்கப் பட்டிருப்பின் அதனை விடைத் தாளில் பிரதி செய்யவேண்டும். தரவுகள் பொருத்தமான இடங்களில் குறிக்கப்படல் முக்கியம்.

தெரியாக் கணியங்களைப் பெறுவதற்கான சமன்பாடுகளை இயன்றளவு சுருக்கமான முறைகளில் தீர்ப்பதன் மூலம் நேரத்தைச் சுருக்கிக்கொள்ள முடியும். சாதாரண முறைகளில் பின்னங்களைச் சுருக்கி நேரத்தை விரயம் செய்யாது மடக்கை வாய்பாடுகளை பயன்படுத்தல் நன்று. சுருக்கி இறுதிவிடை பெறக் காலஅவகாசம் போதாவிடத்து கோவை வடிவிலாகுதல் விடல் வேண்டும்.

### எண் கணிதம்

(i) பரப்பளவும் கனபரிமாணமும்: முக்கோணம், சரிவகம், செவ்வகம், இணைகரம், வட்டம், செவ்வட்ட உருளை என்பவற்றின் பரப்பளவுகளைக் கணிக்கும் முறையினை மாணவர் நன்கு அறிந்திருத்தல் வேண்டும். கோளம், கூம்பு, நான்முகி, சதுரமுகி, அரிபம் என்பனவற்றின் பரப்பளவு, கனவளவு என்பனவற்றுக்கான வாய்பாடுகளை நன்கு அறிந்திருத்தல் வேண்டும்.

(ii) நூற்று வீதம், தனிவட்டி. தொடர்வட்டி: நூற்று வீதத்தினை அடிபபடையாகக் கொண்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதில் பயிற்சி பெற்றிருக்க வேண்டும். தனிவட்டி, தொடர்வட்டி காண்பதற்கான வழிகளை வாய்பாடுகளைப் பயன் படுத்தியும், வாய்பாடுகளின்றியும் அறிந்திருக்கவேண்டும்.

(iii) கடன்களும் வாடகைக் கொள்வனவும்: நூற்று வீதத்தை அடிப்படையாகக் கொண்டு இவை தொடர்பான வினாக்களுக்கு விடைஅளிக்க வேண்டும்.

(iv) பங்கும் சரக்கு முதலும்: நூற்றுவீதத்தை அடிப்படையாகக் கொண்டு விடை காண வேண்டும். தெரியாக் கணியங்களை கணிப்பதற்கு அட்சரகணித சமன்பாடுகளை அமைத்து விடைகாணல் இலகுவாக அமையும்.

(v) மெற்றிக் அளவுமுறைகள் நீட்டலளவை, நிறுத்தலளவைக்கான சகல மெற்றிக் அலகுகளையும் நன்கு அறிந்திருந்து அவற்றில் பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும்.

பொ. ச. ஞானசீலன்

# அறிமுகம்

வைபவங்களிற்கு சிறந்த
அன்பளிப்பு பொருட்களிற்கு

**எழிலகம்**

**அங்கு ஓர் புதுமை!**

அதுவே அன்பளிப்பு மடல்கள்

பொருட்களிற்கு பதிலாக நீங்கள் விரும்பும் தொகைக்கு நாம் அன்பளிப்பு மடல்கள் வழங்குவோம்

அவற்றை எம்மிடம் கொடுத்து தாம் விரும்பிய பொருட்களை பெறுநர் வாங்கலாம்.
வைபவங்களிற்கு போதிகளுடன் செல்ல வேண்டியதில்லை.
பெறுநர் ஒரே வகை பொருட்களை பலரிடம் பெறும் நிலையுமில்லை

எவ்வகை அன்பளிப்பிற்கும்
சுலப வழி அன்பளிப்பு மடல்கள்

**எழிலகம்**

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

குறிப்பு: வழங்குநரும் பெறுநரும் எமது மாதாந்த பரிசுத் திட்டத்தில் சேர்க்கப்படுவர்.

(சி/7480)



## முழுநேர ஆசிரியர்கள் தேவைப்படுகிறது

**கணித, விஞ்ஞான, தமிழ் ஆசிரியர்கள் தேவைப்படுகின்றது**

அவர்களிற்கான தகைமைகள்:

01. பட்டதாரிகள்
02. மேற்குறிப்பிட்ட பாடங்களில் கற்பித்த அனுபவம் உள்ளவர்கள்.
03. கல்விப் பொதுத் தராதர (சா/தரம்) கற்பிக்கும் பாடம் திறமைச் சித்தி எய்தியிருத்தல் வேண்டும். அத்துடன் க/பொ/த (உ/தரத்தில்) கற்பிக்கும் பாடங்களில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

- இவர்கள் நேர்முகப் பரீட்சையின் மூலம் தேர்ந்து எடுகைப்படுவார்கள்.
- மேற்குறிப்பிட்ட தகைமை உள்ளவர்கள் மாத்திரமே விண்ணப்பிக்கவும்.

விள. இல. 201

மே/பா. ஈழநாதம்
31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.

[சி/7471]


### ஏழை மக்களின்

ர்தியில் பயணம் செய்கிறார். இதுவரை வானத்தில் 732 அத்துமீறல்கள் நடைபெற்று விட்டன. பின் 786 இலக்க தீர்மானத்தை நிறைவேற்றி தனது முன்னைய முடிவினை மீண்டும் உறுதிப்படுத்த வேண்டிய நிலை. போர்க் குற்றங்களைக் கண்டித்து ஒரு தீர்மானம், போர்க் குற்றவாளிகளைத் தண்டிக்க ஒரு தீர்மானம். பின் அதே குற்றவாளிகளோடு சமமாக சமாதானப் பேச்சு ஐ.நா.படைகளே சேர்பிய படைத் தளபதியை பகைக்க விரும்பாத நிலையில் தீர்மானங்கள் தீர்வுகளாக அமையாததில் வியப்பில்லை. இவ்வாறாக பாதுகாப்புச் சபையின் தீர்மானங்களும் தொடர்கதையாக நீள்கின்றன, இத்தகைய நிலையில் உலக மக்கள் ஐ. நா. மேல் வைத்திருக்கும் மதிப்பு எவ்வளவு காலத்திற்கு நீளப் போகின்றது என்பதே இன்று நாம் எழுப்பும் வினா.


**UNIVERSITY OF JAFFNA
SHRI LANKA**

**EXTERNAL REGISTRATION
1992-93**

Admission and Welcome of Freshers and Sophomore.
(External Student) 1992/93

Admission and welcome of external students will take place under the patronage of the Vice Chancellor in Kailaspathy Auditorium on Saturday 02 October 1993 at 2-00 p. m.

pleace be present.

REGISTRAR
University of Jaffna

(சி-7475)


## ஆழிக்குள் தேடிய தங்கம்



### திருமதி தங்கம்மா சுந்தரலிங்கம்

'பொறுப்பை'ப் பணத்தால் அளக்கின்ற பூமியிலே
பொறுப்பாய் நடந்தாய், புடம் போடப்பட்டாய் நீ
தீயிலல்ல, மோதும் திரைகடலில்!
பொன்னை - பொருளை - பூசிக்கும் மாந்தரது
சின்னத்தனங்கள் சிறிதும் அணுகாத
குன்றாய் அரிய குணத்தால் மிக உயர்ந்து
நின்றாய் திமிர்ந்து; நினைவாகப் போய்விட்டாய்!
அன்பால் எமையெல்லாம் ஆளவந்த மாதரசே,
பெண்பாலவர்க்குள் நீயோர் தனிப்பிறவி
ஈழப்பயணம் - இனி வருவாய் என்றிருந்தோம்
நீளப் பயணம் செல்லவோ நினைத்திருந்தாய்!

மைத்துனி சிவகாமி,
மருமக்கள் குணா, ரூபா.

விக்கினேஸ்வரா வீதி,
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.

(சி-7466)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

**1993 09. 26**



தோற்றம்:
1926. 10. 12

மறைவு:
1993. 08. 26

உயர்திரு.

### முருகேசு கணேசலிங்கம்

(முன்னாள் நீர்ப்பாசனப் பொறியியலாளர்)

அன்பின் திருவுருவாய் பாசத்தின் உறைவிடமாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து எமக்காகவே வாழ்ந்து இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வமே! எங்கள் சிறப்பைக் காணாது, எம்மை எல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு அணைந்த ஐயா! எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவு எம்மை விட்டு என்றும் அகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அன்னாரின் அந்தியேட்டி 93.09 26 ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் "ஜெயந்தி வாசா" இலையாணன், உடுப்பிட்டியில் நடைபெறும். அன்னாரின் உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கிரியைகளில் கலந்து சிறப்பிக்குமாறும், மதியபோசனத்திலும் பங்கேற்குமாறும் மிகவும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
ச. இராசலிங்கம்
இலையாணன்,
உடுப்பிட்டி.

உங்கள் நினைவால் வாடும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

(5851)


# அபிராமி மில்

உங்களுக்குத் தேவையான தானிய வகைகளை
உங்கள் விருப்பத்திற்கேற்ப

## உடைத்து, தீட்டி,
## அரைத்துக் கொள்ளலாம்.

ஐயனார் கோவில் வீதி,
தட்டாதெருச் சந்தி,
யாழ்ப்பாணம்.

(சி-7481)

# சிறிலங்கா ஜனாதிபதி எங்கே போகிறார்? எப்படி போகிறார்?

முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தனது சொத்துக்கு உயில் எழுதி வைக்காதது போன்றே தனது அரசியல் வெற்றிடத்தை ஐ.தே. கட்சியில் யார் நிரப்புவது என்பது குறித்தும் அவர் சிந்திக்கவில்லை. அவ்வாறு சிந்திப்பதற்கு அவர் இஷ்டப்படவுமில்லை. ஏனெனில் தனது ''சாம்ராச்சியத்தின்'' முடிவு இவ்வளவு விரைவில் வந்து சேரும் என அவர் எண்ணவில்லை.

இந் நிலையில், கடந்த மே மாதம் முதலாம் திகதி ஜனாதிபதி பிரேமதாசா கொல்லப்பட்டபோது ஏற்பட்ட வெற்றிடம் அப்போதைய பிரதமரான டி.பி. விஜேதுங்காவால் நிரப்பட்டது. பிரேமதாசாவினால், தனது அரசியல் வைரிகளை ஓரம் கட்டுவதற்கென முன்னிலைக்குக் கொண்டுவரப்பட்டவரான டி. பி. விஜேதுங்கா பிரேமதாசா மரணமடையும் வரை அவர்எதிர்பார்த்தது போன்று அவரது கைப்பாவையாகவே செயற்பட்டவர். பிரேமதாசா ஆட்சிக் காலத்தில் அவருக்கு அடுத்து அதிகாரங்கள் கொட்டிக் கிடந்த ஒருவராக டி.பி. விஜேதுங்கா இருந்தார். அவரிடம பிரதமர், நிதி அமைச்சர் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் என்ற முக்கிய பதவிகள் உட்பட மேலும்பல பதவிகளும், அவற்றிற்கான அதிகாரங்களும் இருந்தன.

ஆனால், டி. பி. விஜேதுங்காவின் அரசியற் பின்னணம் குடும்பப்பின்னணி என்பவை பலம் பொருந்தியவையாக இல்லை. இவையே பிரேமதாசா இவருக்கு அச்சமின்றி உயர் பதவிகளையும் அதிகாரங்களையும் வழங்க உதவியதோடு இறுதியில் ஜனாதிபதிப் பதவி கிட்டவும் உதவியதாயினும் ஜனாதிபதியாகப் பதவி ஏற்ற பின்னர் பெரும் அரசியற்பின் தளம் ஒன்று இல்லாமை அவருக்கு சில சிரமங்களைஏற்படுத்தின.

ஆகையினால் அரசியல் தளம் ஒன்றை உருவாக்கிக் கொள்ள வேண்டிய அவசியத்தை சில மாதகால ஆட்சி அனுபவம் அவருக்கு உணர்த்தியது. ராஜீவ் காந்தியின் கொலையின் பின்னர், ஆட்சி அதிகாரத்திற்கு வந்த இந்திய பிரதமர் நரசிம்மராவ் அரசியல் தளமின்றி அல்லலுறுவது கூட அவருக்கு ஒரு படிப்பினையாக இருந்திருக்கக் கூடும்.

இதேவேளை டி. பி. விஜேதுங்க ஒரு பௌத்தமத அடிப்படைவாதி. அத்துடன் ஓர் இனவாதி என்பதற்கும் அவரது கடந்தகால நடவடிக்கைகள் சில சுட்டிக்காட்டப்படக் கூடியன. இவரது திணைக்களம் ஒன்றில் வழங்கிய வேலை வாய்ப்பில் நூறு வீதமும் சிங்களவராக இருக்கப் பார்த்துக் கொள்ளப்பட்டதாக குறை கூறப்பட்டதும் உண்டு.

மேலும் டிங்கிரி பண்டா விஜேதுங்க ஜனாதிபதியாகப் பதவி ஏற்ற பொழுது அவர் 'ஓர் இடைக்கால ஜனாதிபதி' என்றே அரசியல் பார்வையாளர்கள் கருதினர். அதாவது பிரேமதாசா விட்டுச் சென்ற ஒன்றறைவருட பதவிக் காலத்திற்கான ஓர் இடைக்கால ஜனாதிபதியாகவே விமரிசிக்கபட்டார். ஆனால், இன்றைய நிலையும விஜேதுங்கவின் நடவடிக்கைகளும், அவர் எங்கே போகின்றார்? எப்படி போக முற்படுகின்றார் என்ற கேள்வியைப் பல மட்டங்களிலும் எழுப்பியுள்ளன.

இக் கேள்விகள் எழும்புவதற்கு இனப்பிரச்சினை குறித்து டி. பி. விஜேதுங்கவின் இன்றைய நிலைப்பாடும ஜனாதிபதி ஆட்சிமுறை பற்றிய அவரின் சிந்தனையும் முக்கிய அடிப்படைகளாகவுள்ளன.

நிரந்தரமாக ஜனாதிபதியாகப் பதவி ஏற்று ஒரு வார காலத்திற்குள் (மே-14 இல்) கண்டியில் பத்திரிகையாளரிடம் பேசிய டி. பி. விஜேதுங்க "வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு பேசசுவார்த்தை மூலம் தான் தீர்வு காணப்பட வேண்டும். தீர்விற்கான மார்க்கம் அதுதான் ஆனால் அதற்கான வழி எது என்பதுதான் விளங்கவில்லை பிரபாகரனுடன் பேச்சுவார்த்தை நடத்த யாராவது உதவினால் அது மிக மகத்தான செயலாகக் கணிக்கப்படும்'' எனத் தெரிவித்ததோடு, ''நாம் சமாதானத் தீர்வை விரும்புகிறோம் சமாதானம் விரைவில் உருவாக வேண்டும் என்பதே எமது அவாவும் பிரார்த்தனையும்'' என்று தெரிவித்திருந்தார்.

ஆனால் அவரது இந் நிலைப்பாடானது மூன்று மாதங்கள் கூட நீடிக்கவில்லை அவர் தனது நிலைப்பாட்டை முற்றாகவே மாற்றிக் கொண்டார் வடக்கு - கிழக்கில் இனப்பிரச்சினை என்பதே இல்லை விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை என்பதற்கே இடமில்லை வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு இராணுவத்தீர்வே ஒரே தீர்வு எனவும் தெரிவித்துள்ளதோடு தான் செல்லும் இடமெல்லாம் வற்புறுத்தியும் வருகின்றார்.

டி. பி. விஜேதுங்காவின் இந் நிலைப்பாடானது, தனியாக இனப்பிரச்சினை தொடர்பாக அவர் செய்துள்ள கொள்கை மாற்றம் என்பதை விட தென்னிலங்கை அரசியலில், டி. பி. விஜேதுங்கா தனது நிலையினைத் தக்கவைத்துக்கொள்வதற்கும், எதிர்கால அரசியலில் தனது ஸ்தானத்தை நிலை நிறுத்திக் கொள்வதற்குமான நடவடிக்கை என்றே கொள்ள வேண்டும்.

சிங்கள அரசியற் தலைவர்கள் தமது தலைமைத்துவத்தை நிலை நிறுத்திக்கொள்வதற்கும் தமது அரசியல் எதிர்காலத்தை நிலைநிறுத்திக் கொள்வதற்கும் எப்பொழுதும் தம்மை பௌத்த சிங்கள தலைவர்களாக நிலைநிறுத்திக் கொள்வதன் மூலமே வெளிக்காட்டிக் கொண்டனர். இந்த வரிசையில், டி. எஸ். சேனநாயக்காவில் இருந்து டி. பி விஜேதுங்கா வரை எவருமே மாறுபட்டவர்கள் அல்ல.

1956 ஆம் ஆண்டு தனது அரசியல் அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொள்வதற்காகவே எஸ். டபிள்யூ. ஆர் டி. பண்டாரநாயக்க தனிச் சிங்கள மசோதாவை கொண்டு வந்தார். இதன் மூலம் தனது தலைமைத்துவத்தை தக்க வைத்துக் கொண்டார். இதே போன்றே 1977 இல் இடம் பெற்ற இனக்கலவரத்தைத் தொடர்ந்து தொலைக் காட்சியில் பேசிய அன்றைய ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தனா ''நான் சிங்கள மக்களின் தலைவனாக இருக்கவே விரும்புகிறேன்'' என்று தனது உண்மைச் சொரூபத்தை வெளிக்காட்டினார்.

அதாவது, சிங்கள தலைவர்கள் நெருக்கடியின் போதெல்லாம் தம்மை பௌத்த மத அடிப்படை வாதத்தின் தலைவர்களாகவே காட்டிக் கொள்ள முற்பட்டனர் - காட்டிக் கொண்டனர். இதன் மூலம் அரசியலில் தமது நிலையை ஸ்திரணப்படுத்தியும் கொண்டனர்.

இந்த நிலையில் தான் தற்பொழுது ஆட்சியில் இருக்கும் டி. பி. விஜேதுங்காவும் தனது ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ளவும், எதிர்கால அரசியலில் நிலைப்படுத்திக் கொள்வதற்காகவும் தம்மை பௌத்தமத அடிப்படைவாதியாகக்காட்டிக் கொண்டு தமிழர் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை முற்றாக எதிர்த்து நிற்க முற்பட்டுள்ளார்.

டி. பி. விஜேதுங்காவிற்கு ஜனாதிபதி பதவி என்பது எதிர்பாராத விதமாகக் கிடைத்தொன்று என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை. இதனை அவரே ஏற்றுக்கொண்டாலும் ஆச்சரியப்பட எதுவுமில்லை ஆகையினால், இடைக்கால ஜனாதிபதியாக பதவி கிட்டியபோது அவரே அடுத்த பதவிக்காலம் குறித்து சிந்தித்திருப்பார் என எண்ணுவதற்கில்லை. ஆனால், பதவியில் அமர்ந்த பின்னர் அவரின் எண்ணமும் சிந்தனையும் அடுத்த ஜனாதிபதி பதவிபற்றியதாக மாறியதில் ஆச்சரியப்பட ஏதுமில்லை.

ஜனாதிபதி பிரேமதாச கொல்லப்பட்டபோது பிரதமர் என்ற ரீதியில் தற்காலிக ஜனாதிபதியாக டி. பி. விஜேதுங்கா நியமிக்கப்பட்டிருப்பினும் பின்னர் இடைக்கால ஜனாதிபதியாக அவர் நியமனம் பெறுவதற்கு முன்னாள் பிரதமர் என்பதைவிட ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஓர் அணியினர் இருந்தமையே காரணமாகும். அன்றைய நெருக்கடி நிலையில் ஐ. தே. க. உடைந்துவிடுமோ என்றும் எதிர்பார்ப்பு சிலரிடம் இருந்தது.

இந்நிலையில் தான் பிரேமதாசாவால் முன்னணிக்குக் கொண்டுவரப்பட்டவரானாலும், கட்சிக்குள் அணிசார்ந்து நடவடிக்கை மேற்கொள்ளாதவர் என்ற நிலையில் டி. பி விஜேதுங்கா ஜனாதிபதியாக தெரிவுசெய்வதற்கு சகலரினதும் ஒத்துழைப்பு கிடைக்கப்பெற்றது. ஆனால் இவரது ஆட்சிக் காலத்தைப் பயன்படுத்தி கட்சியில் முதன்மை பெறுவதற்கும் அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக நியமனம் பெறுவதற்குமான முயற்சியில் பலர் இறங்கினர். இதில் பிரதமரான ரணில் விக்கிரமசிங்கா முதன்மையானவராக இருந்தார்

– ஜெயராஜ் –

ஆனால், இடைக்கால ஜனாதிபதியாக நியமனம் பெற்ற டி பி விஜேதுங்கா அடுத்த ஜனாதிபதி பதவிக் காலத்திலும் குறியாக இருப்பது அவருடைய தற்போதைய நடவடிக்கைகளில் இருந்து அனுமானிக்க முடிகிறது, சிறிலங்கா ஜனாதிபதிகளில் சர்வாதிகாரிகள் எனப்படும் ஜே. ஆர். ஜெயவர்த்தனா, ஆர். பிரேமதாசா ஆகியோர் தம்மிடம் வைத்திருந்த அதிகாரங்களை விட டி. பி, விஜேதுங்கா தன்னிடம் கூடுதல் அதிகாரங்களைக் கொண்டுள்ளமை இதனை ஊர்ஜிதப்படுத்துவதாகவுள்ளது அதாவது ஜனாதிபதிகளான ஜே ஆர். ஜெயவர்த்தனா, பிரேமதாசா ஆகியோர் ஜனாதிபதியுடன் வைத்திருந்த அமைச்சுக்களை விட கூடுதலான அமைச்சுக்களையும் முக்கிய அமைச்சுக்களையும் டி. பி. விஜேதுங்கா வைத்துள்ளார். அதாவது இன்றும் நிதி மற்றும் பாதுகாப்பு ஆகிய முக்கிய அமைச்சுக்கள் இரண்டும் முழுமையாகவே ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவிடம் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா மேற்கொண்டிருந்த சில நடவடிக்கைகளுக்கு ரணில் முட்டுக்கட்டையாக முனைந்தமையானது டி. பி. விஜேதுங்காவை விளிப்படையச் செய்திருக்கக்கூடும். குறிப்பாக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியை ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைத்துக் கொள்ள ஜனாதிபதி எடுத்தமுடிவு இறுதியில் கைவிடப்பட்டமையானது ரணில்எதிர்ப்பால்என்றே அறியமுடிகின்றது. அதாவது ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ரணிலுக்குஎதிரான ஒரு போட்டியாளரை- காமினிதிசாநாயக்காவை- உருவாக்குவதன்மூலம் ஜனாதிபதிப்பதவியை அடுத்த முறையும் தக்கவைத்துக் கொள்ள டி. பி. விஜேதுங்கா மேற் கொண்ட முயற்சி அது என்று கருதப்படுகின்றது. ஆனால் இவ் விடயத்தில் விஜேதுங்காவிற்கு ஒரு தோல்வி என்றே கருத வேண்டும்.

மேலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அரசின் கட்டுப்பாட்டிலுள்ள வெகுசனதொடர்பு சாதனங்களைத் தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வது ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவிற்கு பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. ரணிலின் இந் நடவடிக்கையானது அடுத்த ஜனாதிபதி வேட்பாளருக்குரிய திட்டமிட்ட நடவடிக்கை என்றே அவரால் கருதப்படுவதாக அறியவருகின்றது.

இந் நிலையில் தான் டி. பி. விஜேதுங்கா பௌத்தமத அடிப்படை வாதத்திற்குத் தலைமை ஏற்பதன் மூலம் கட்சிக்கு உள்ளும், வெளியிலும் தனது நிலையை உறுதிப்படுத்த திட்டமிட்டுள்ளதாகத் தெரிகின்றது. சிறிலங்காவின் முன்னாள் ஆட்சித் தலைவர்கள் போலவே இவரும் இவ் வழியைத் தேர்ந்தெடுத்திருப்பது அவரை நிலைநிறுத்திக் கொள்வதற்கு பெரிதும் உதவும் என்பதில் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை.

ஆனால் முன்னாள் ஜனாதிபதிகளான ஜே ஆர் ஜெயவர்த்தனா, ஆர். பிரேமதாசா ஆகியோர் பலமான அரசியல் அடித்தளத்தைக் கொண்டவர்களாக இருந்தமை காரணமாக, பௌத்தமத அடிப்படை வாதிகளின் ஆதிக்கத்தில் இருந்து ஓரளவு தானும் விடுபட்டவர்களாக இருந்தார்கள். இதன் மூலம் தம்மை தேசிய தலைவர்களாகப் பாவனை செய்யவும் முற்பட்டனர்.

ஆனால் டி. பி. விஜேதுங்கவிற்கு அவ்வாறான அடித்தளத்தை உருவாக்குவதற்கான கால அவகாசமோ அன்றி அதை உருவாக்கும் திறமையோ இருப்பதாகவில்லை. அவ்வாறு இருந்திருப்பின் அவர் தனது நீண்ட அரசியல் வாழ்க்கையில் அதனை உருவாக்கி இருக்க முடியும் இந் நிலையில் தான் இலகுவானதும், அதேவேளை உணர்ச்சிபூர்வமானதும், விரைவான பலனை அடையக் கூடியதுமான தீவிர மதவாதத்திற்கு தலைமை தாங்க முன்வந்துள்ளார் இதேவேளை முன்னரே இனவாதப் போக்குடையவரென கணிக்கப்பட்டுள்ளஇவர் இம் முடிவை மேற்கொள்வது அவரைப் பொறுத்து சங்கடமான ஒரு விடயமாகவும் இருப்பதற்கில்லை.

இவரின் இம் முயற்சி தற்பொழுதே குறிப்பிடக் கூடிய வெற்றியை ஈட்டிக் கொடுத்துள்ள தெனலாம். ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்றக்குழுக் கூட்டம் ஜனாதிபதியின் தீர்மானத்தை வரவேற்றுள்ளதோடு இவரது இம் முடிவு குறித்து பாராட்டும் தெரிவித்துள்ளது அதேவேளை, இதுவரை ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இனப்பிரச்சினை தொடர்பாக கடைப்பிடித்து வந்த தளம்பல் போக்கை கண்டித்துவந்த பௌத்த மத அடிப்படைவாத அமைப்புக்களான சிங்கள மகாசபையும் ஹெல உறுமய போன்ற அமைப்புக்களும் இம் முடிவை வரவேற்றுள்ளதோடு டி. பி.க்கு தமது ஆதரவைத் தெரிவித்தும் உள்ளன.

இதேவேளை இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை என்ற அறிவிப்பின் மூலமும் இராணுவ தீர்வே ஒரேவழி என்பதன் மூலமும் சிறிலங்கா இராணுவத்திடமும் அவர் தனது நிலையை உறுதிப்படுத்திக் கொண்டுள்ளார். இது வரை இனப் பிரச்சினையில் அரசியல் வாதிகள் ஒரு தெளிவான வழியைப் பின்பற்றாமையினால் தாம் பெரும் நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ளதாகவும்போரில் வெற்றி பெற முடியாது உள்ளதாகவும் குற்றம் சுமத்தி வந்த இராணுவத்திற்கு ஒரு வாய்ப்பை டி.பி. விஜேதுங்க வழங்கியுள்ளார்.

டி பி. விஜேதுங்காவின் இந் நிலைப்பாடானது இராணுவத்தரப்பிலும் பலமாக வரவேற்கப்பட்டதோடு பாராட்டும் தெரிவிக்கப்பட்டது. இராணுவத் தளபதி சிசில் வைத்திய ரெட்னா ஜனாதிபதியின் இந் நிலைப்பாட்டைவெளிப்படையாகவே பாராட்டியுள்ளார். அவர் ''ஜனாதிபதி டி பி. விஜேதுங்கவின் முடிவானது வடக்கில் இராணுவத்தினர் யுத்தம் புரிய நல்லதொரு வழிகாட்டியாக அமைகின்றது'' என்றார்.

அதாவது டி. பி. விஜேதுங்கா நிலையில்லாது தடுமாறிய தனது அரசியல் தளத்தை நிலைநிறுத்த தன்னை பௌத்தமத அடிப்படை வாதத்தின் தலைவனாக வெளிக்காட்டிக் கொண்டுள்ளார், இதன் மூலம் ஐக்கிய தேசிய கட்சிக்குள் உள்ள அடிப்படை வாதிகளின் பலமான ஆதரவையும், அதற்கு வெளியில் பௌத்த அடிப்படை வாதிகளின் நம்பிக்கைக்குரியவராகவும் அவர் தன்னை ஆக்கிக் கொள்வதன் மூலம் பலமான ஓர் அரசியற் தளத்தை பெற்றுக் கொள்ள முற்படுகின்றார், இதே வேளை இராணுவத் தீர்வு என்பதை வலியுறுத்துவதன் மூலம் இராணுவத்தின் நம்பிக்கைக்குரியவராகவும் மாறியுள்ளார்.

ஆனால் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் இம்முடிவானது பௌத்த சிங்கள பேரினவாதிகளுக்கு பெரும் ஊக்கமும், புதஉணர்வும் வழங்கும் ஒன்றாகவே அமையும் அதேவேளை பல தசாப்தங்களாக இடம்பெற்றுவரும் இனப்பிரச்சினைக்கான தீர்வையும், சமாதானத்தையும் கண்காணாத தொலைவிற்குத் தூரத்திவிடும் என்பதே நிதர்சனம்.

## புதிய அரசியலமைப்புக்கு அங்கீகாரம

கம்போடியா நாடாளுமன்றம் புதிய அரசியலமைப்பு ஒன்றை அங்கீகரித்துள்ளது. நாடாளுமன்றத்தில் இப் புதிய அரசியலமைப்பு தொடர்பாக விவாதிக்கப்பட்டு வாக்கெடுப்பு நடத்தப்பட்ட போது 113 பேர் ஆதரவாகவும் ஐவர் எதிராகவும் வாக்களித்தனர் இருவர் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை பி.பி.சியின் செய்திகளின்படி பீக்கிங்கில் தற்போது தங்கியுள்ள இளவரசர் சிகானூக் விரைவில் நாடு திரும்பி அரசியலமைப்பை ஏற்றுக் கைச்சாத்திடுவார் எனத் தெரிகிறது.

## கிளை திறப்பு

இன்று மு. ப. 10, 00 மணிக்கு மானிப்பாயில் வர்த்தகத் திணைக்களத்தின் புதிய கிளையொன்று யாழ்மாவட்ட பிரதி ஆணையாளர் திரு. து. வைத்திலிங்கம் அவர்களினால் திறந்துவைக்கப்படவுள்ளது.

# அமெரிக்கா, பிரிட்டனில் தமிழர் ஆதரவு பிரசாரம்

## சுமணதேரர் கவலை

(கொழும்பு)
அமெரிக்காவிலும் பிரித்தானியாவிலும் தமிழ் தீவிரவாதிகள் இலங்கைக்கு எதிராக பிரசாரங்களை செய்து வருகின்றனர். அந்த நாடுகளுக்கு சென்ற போது இதனை நான் நேரடியாகவே அவதானித்தேன் என பத்தேகம ரதின சார பிரிவினா அதிபதி வலிவிட்டியே சுமணதேரர் தெரிவித்தார்.

இலங்கை தொடர்பாக அவர்கள் செய்யும் பிரசாரங்களால் அந்நாட்டு அரசாங்கங்களும் மக்களும் அவர்களை பாதுகாப்புடன் போஷித்தும் வருகின்றனர் எமது தூதுவர்களும், அந்நாடுகளுக்கு செல்லும் அரச பிரதிநிதிகளும் இந்நிலை குறித்து எதுவுமே கூற இராசிகள் இல்லை அவர்கள் மௌனம் சாதிப்பது வியப்பாக இருக்கிறது. அமைச்சர்கள் இந்நாடுகளுக்கு சென்று ஐந்து நட்சத்திர ஹோட்டல்களிலிருந்தவாறே அரசபணத்தை செலவிடுகின்றனர். இந்நிலையில்நாம் விரைவில் சர்வதேச அரங்கில் அநாதைகளாகி விடுவோம்.

அமெரிக்காவின் பிரதான நகரங்களில் தமிழர்கள் அங்குள்ள வீதிகளிலே பகிரங்கமாகவே தமது பிரசாரங்களை செய்கின்றனர் இதனை நியூயோர்க், வாஷிங்டன், சிக்காகோ போன்ற நகரங்களில் நேரில் கண்டேன் லண்டனில் சகல தெருக்களிலும் நூற்றுக்கணக்கானவர்கள் பிரிவினைக்கு ஆதரவாக போராட்டங்களை தொடருகின்றனர்என்று வலிவிட்டியே சுமணதேரர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஜெயலலிதா-புலிகள் தொடர்பு ஆராய கமிசன்

தமிழக முதலமைச்சர்களுக்கும் மாநில ஆளுநருக்கும் இடையில் அதிகரிக்கும் கருத்து வேற்றுமை ஜெயலலிதா ஆட்சிக்கு பங்கத்தை ஏற்படுத்தலாம் என தெரிவிக்கப்படுகிறது இதேவேளை விடுதலைப் புலிகளுடன் முதலமைச்சர் ஜெயலலிதா தொடர்புகளைகொண்டுள்ளார் என்ற குற்றச்சாட்டு சுற்றிசனை விபரிக்க விசாரணை கமிஷன் ஒன்று அமைக்கப்படலாம் என டில்லி வட்டாரங்களில் பேசப்படுவதாக பி.பி.சி. தெரிவித்தது.

காவிரி நதிநீர் பங்கீடு தொடர்பாக ஜெயலலிதா உண்ணாவிரதம் இருக்க ஆரம்பித்ததை ஆளுநருக்கு அவர் அறிவிக்காமை, ஆர். எஸ். எஸ். கட்டடத்தில் ஆஸ்டிம் நடைபெற்ற குண்டு வெடிப்பு தொடர்பாக உடனடியாக ஆளுநருக்கு அறிவிக்காமை என்பன ஜெயலலிதாவிற்கும் ஆளுநர் சென்னா ரெட்டிக்கும் இடையிலான கருத்து வேறுபாட்டை அதிகரித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

## பழனி மக்களவை தேர்தல் வாக்குஎண்ணுவது நிறுத்தம்

(சென்னை)
பழனி மக்களவை இடைத்தேர்தல் வாக்குகள் எண்ணும் பணி மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இத்தொகுதியில் வாக்குகள் எண்ணும் பணி நேற்று ஆரம்பிப்பதாக இருந்தது. வாக்கெடுப்பின் போது இத்தொகுதியில் வாக்காளர்களை வாகனங்களில் சட்டவிரோதமாக வாக்கு நிலையங்களுக்கு ஏற்றிச்சென்றதாக வெளியான குற்றச்சாட்டுகளே வாக்கு எண்ணும் பணி ஒத்திவைக்கப்பட்டதற்கான காரணம் எனக் கூறப்படுகிறது. இக்குற்றச்சாட்டு தொடர்பாக தற்போது தேர்தல் ஆணையகம் விசாரணை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ராணிப்பேட்டை சட்டப்பேரவை தொகுதிக்கான இடைத்தேர்தல் வாக்குகள் எண்ணும் பணி நேற்றுக் காலை ஆரம்பிக்கப்பட்டது. முடிவுகள் இன்று காலை வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.


தனியார் கல்வி நிறுவன நிர்வாகிகளுக்கும்,
ஆசிரியர்களுக்கும், ஊழியர்களுக்கும், மாணவர்களுக்கும்
தனியார் கல்வி நிறுவன ஒன்றியம
யாழ். மாவட்டம

விடுக்கும்

ஓர் முக்கிய அறிவித்தல்

இந்தியப்படை நம், தமிழ் இன மக்களுக்கு இழைத்த கொடுமைகளை தாங்காது துயர்கொண்டு எம் மக்களுக்காக எம் மண்ணுக்காக ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து 15-09-87 தொடக்கம் 26-09-87 வரை நல்லூர் கந்தசாமி கோவில் வீதியிலே உண்ணாவிரதமிருந்து ஈகைச்சாவு அடைந்த தியாகி லெப். கேணல். திலீபனின் 6 ஆம் ஆண்டு நினைவு கூரும் முகமாக நாளை 25-09-93 சனிக்கிழமை சகல தனியார் கல்வி நிறுவனங்களையும் மூடி நிர்வாகிகள். ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள் அனைவரையும் நல்லூர் வீதியில் நடைபெறும் உண்ணாவிரதத்திற்கு காலை 7 30 மணிக்கு சமுகமளிக்குமாறு தனியார் கல்வி நிறுவன ஒன்றியத்தின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

பொதுச் செயலாளர்

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்,
யாழ். மாவட்டம். (சி/7484)


### உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**23-09-93**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 11035

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள் இல்லை.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-5760, 26-3294, 28-1085, 26-6264, 26-1609, 27-9425, 26-7552, 24-2288, 40-6979, 26-5112, 27-0493, 40-2249, 43-3854, 42-1059, 42-7312.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

## அறிவுறுத்தல் கூட்டம்

க. பொ. த (சா/தர) முன்னோடிப் பரீட்சை -1993 இற்கான பணிக்குழுவினர்கட்கு (இணைப்பாளர், உதவி இணைப்பாளர், மேற்பார்வையாளர், நிரந்தர நோக்குநர்) நாளை இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற இருந்த அறிவுறுத்தல்கூட்டம், எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 30 மணிக்கு இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறுமென யாழ் பிரதேச கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

### மெய்வல்லுநர் போட்டி

கொக்குவில் இந்துக்கல்லூரியின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை மாலை 2. 00 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது. (09)

### கண்டி

பொலிஸ் அதிகாரி லக்சுமன் சேனாதீர தெரிவித்துள்ளார்.

புலிகளின் ஊடுருவல் அங்கு அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந் நடவடிக்கை எடுப்பட்டதாகவும் தற்போது இதற்கு முன்னேற்பாடாக வீதி தடைகள் போடப்பட்டு சோதனைகள் மேற்கொள்ளப் படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### யாழ். வைத்திய

வைத்திய சாலையின் ஆய்வு கூட உத்தியோகத்தர் ஒருவர் எயிட்ஸ் பரிசோதனை தொடர்பான விசேட பயிற்சியை முடித்துக் கொண்டு நேற்று யாழ்ப்பாணத்திற்கு திரும்பியுள்ளார். இவர் எயிட்ஸ் நோயை திட்டவட்டமாக இனம் கண்டு உறுதிப்படுத்தக் கூடிய சகலபரிசோதனைகளையும் மேற்கொள்வதற்கான பயிற்சியையும் பெற்றுள்ளார்.

இம் முயற்சியின் அடுத்த கட்டமாக 'எயிட்ஸ்' நோய் தொடர்பாக மேற்கொள்ளப் படும் பரிசோதனைகளுக்குத் தேவையான ஆய்வுகூட மருத்துவ உபகரணங்கள் மற்றும் பரிசோதனைக்குப் பயன்படுத்தப்படும் மருந்துப் பொருள்கள் ஆகியவற்றை கொழும்பில் இருந்து எடுத்து வருவதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. பெரும்பாலும் வட பகுதிக்கு அடுத்த கட்டமாக வந்துசேரும் கப்பல் ஒன்றில் இவை எடுத்து வரப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (க), (நி)

## இன்ஸ்பெக்டரின் பை திருடிய இராணுவத்தினர் கைது

[கொழும்பு]
இளம் இராணுவ வீரர் ஒருவர் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரின் பையைத் திருடிய சம்பவம் ஒன்று அண்மையில் கொழும்பு-கண்டி புகையிரதத்தில் இடம் பெற்றுள்ளது.

திருடிய இராணுவ சிப்பாய் பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் கைது செய்யப்பட்டு கண்டி பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இவர் மீரிகமவைச் சேர்ந்தவர் எனவும், இராணுவ தலைமை அலுவலகத்தில் கடமை புரிபவர் எனவும் தெரிய வந்துள்ளது.

## சுயதொழில் முயற்சிகளுக்கு கடன்வழங்க நடவடிக்கை

(தென்மராட்சி)
தென்மராட்சிப் பகுதியில் உள்ள வசதிகுறைந்த மக்களுக்கு தமது சுயதொழில் முயற்சிக்காக குறைந்த வீதவட்டியின் அடிப்படையில் கடனாக பணத்தினை தென்மராட்சி கோட்டதமிழர் புனர்வாழ்வுக் கழகம் (T.R O) வழங்கி வருகின்றது.

இதேவேளை அப் பகுதியில் பிற இடங்களில் இருந்து அகதிகளாக வந்து இடவசதி இருந்தும் இருப்பிடவசதி இல்லாமல் இருக்கும் குடும்பங்களுக்கு நாவற்குழி, கொடிகாமம், மந்துவில் போன்ற இடங்களில் இதுவரைக்கும் 38குடிசைகளை அடிப்படை வசதிகளுடன் அமைத்துக்கொடுத்துள்ளனர்.

இவ் வேலைத் திட்டங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருவதுடன் வசதிகுறைந்த மாணவர்களுக்கு கல்வி கற்பதற்கு வசதிகளையும் செய்துவருகின்றனர். கிராமங்களில் அமைந்துள்ள பாலர் பாடசாலை பிள்ளைகளுக்கு போசாக்கு உணவும் வழங்கி வருகின்றனர் இவ் உதவிகளால் மக்கள் தமது வாழ்க்கையை இலகுவாக தொடர முடிகின்றது. (86)

### கொள்ளையரின்

பாக பாடசாலை மாணவர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன் தினம் இரவு நடைபெற்ற இச் சம்பவத்தில் கொள்ளையர் மீது உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் துப்பாக்கி சூடு நடத்த முயற்சித்த போது அவர் கொள்ளையரின் சூட்டிற்கு இலக்கானதாக தெரிவிக்கப்படுகிறது.

### சமுகம்தரவும்

(யாழ்ப்பாணம்)
சகல சிரேஷ்ட போதனாசிரியர்களையும் தேசிய கல்வி நிறுவனத்தின் அனுசரணையுடன் பயிற்சி பெறும் பயிலுனர் ஆசிரியர்களுக்குப் பொறுப்பாகவுள்ள சிரேஷ்ட போதனாசிரியர்களையும் நாளைபிற்பகல் 2.00 மணிக்கு யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் யாழ். கல்வித் திணைக்களத்திற்கு தவறாது சமுகம் தருமாறு கேட்டுக் கொண்டுள்ளார். (பா)

### தியாகி

ஆரம்பிக்கவுள்ளனர்.

நல்லூர் கந்தசுவாமி ஆலய வீதியில் அமைக்கப்பட்டிருக்கும் உண்ணாவிரதப் பந்தலில் நேற்று முதல் தொடர் உண்ணாவிரதம் ஆரம்பமாகியது நேற்றுக்காலை 7.48 மணியளவில் இருந்து நீர் அருந்தாமல் தொடர் உண்ணாவிரதத்தை மேற்படி பந்தலில் ஒருவர் ஆரம்பித்தார். இவற்றைவிட உடற்புலிகளின் வலிகாமம் கோட்டத்திற்குட்பட்ட கொழும்புத்துறைப் பிரதேசத்தில் உள்ள சந்தை மைதானத்தில் நேற்று அடையாள உண்ணாவிரதம் நடைபெற்றது. இந்நிகழ்வில் அதிகளவு மக்கள் பங்கு கொண்டனர்.

மேலும் குருநகர் தொடர்மாடி மைதானத்தில் ஆரம்பிக்கப்பட்ட தொடர் உண்ணாவிரதத்தில் பங்கு பற்றும் ஆறு இளைஞர்களும் தொடர்ந்தும் தமது உண்ணாவிரதத்தை நடாத்தி வருகின்றனர்.

அத்துடன்சங்கானை சிவப்பிரகாசமகாவித்தியாலயத்தில் இன்று மாலை 3 00 மணியளவில் தியாகி திலீபனின் நினைவாக எழுச்சி விழா நடைபெறவுள்ளது.

தனியார் போக்குவரத்து சங்கங்கள் 24-09-93 இன்று யாழ். மத்திய பஸ் நிலையத்தில் மேற்கொள்ளவிருந்த தியாகி திலீபன் ஞாபகார்த்த ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் கீழ்க்காணும் வகையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

வலிகாமத்தில் யாழ். பஸ் நிலையத்திலிருந்து மோட்டார் முச்சக்கர வண்டிசேவை சங்கத்தின் இரட்டைத் தூக்குக் காவடியுடன் காலை 7,00 மணிக்கு ஊர்வலமாக நல்லூர் உண்ணாவிரதப் பந்தலை சென்றடைந்து உண்ணாவிரதம் மேற்கொள்ளப்படும்,

வடமராட்சியில் வதிரிச் சந்தியிலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு கரவெட்டி வட்டவையின் அரசடி உண்ணாவிரதப் பந்தலை சென்றடைந்து உண்ணாவிரதம் மேற்கொள்ளப்படும்,

தென்மராட்சியில் சாவகச்சேரியிலிருந்து ஊர்வலமாக நுணாவில் உண்ணாவிரதப் பந்தலை சென்றடைந்து உண்ணாவிரதம் மேற்கொள்ளப்படும்,

(சி) (நி, (க) (யோ) (21) (24) (90) (9)


யாழ் நகர் ஸ்ரீதர் திரையரங்கில்

VON RYAN'S EXPRESS

இத்துடன் 'இதயபூமி 1' [மண்கிண்டிமலை இராணுவமுகாம் தகர்ப்பு] ஒளிவீச்சு காண்பிக்கப்படுகிறது

தினசரி மாலை 4.00 மணி, 6-00 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10-30 மணி,
மாலை 4-00 மணி, 6-00மணி (இ-7352)